Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள்
இல்லங்களிலிருந்து உங்கள் உறவுகளுடன்

INTERNET

மூலமாக உறவாட,
உள்ளூர், வெளியூர்
துரித தொலைத் தொடர்புகட்கு

'திருமுருகன் கொம் நெற்'


இல. 46, ஆடியபாதம் வீதி,
(ப. நோ. கூ. ச. முன்பாக)
திருநெல்வேலி.
T.P.021-222-7310

(ச-1771)


மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 29 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 20 (15.12.2003) திங்கட்கிழமை இதழ் :76

## சுரங்க அறை ஒன்றில் பதுங்கியிருந்த

# ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் அமெரிக்கப் படைகளிடம் பிடிபட்டார்!



(பக்தாத்)

ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன், அமெரிக்கப் படைகளால் நேற்று முன்தினம் இரவு சுரங்க அறையொன்றில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது -

அமெரிக்கப் படைகளுக்கு எதிரான போரை நடத்தி வந்த ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன், தனது சொந்த இடமான திக்ரித் நகரில் மறைந்திருப்பதாக அமெரிக்கப் புலனாய்வுத் துறைக்குத் தகவல் கிடைத்திருந்தது.

இதையடுத்து நேற்றுமுன்தினம் இரவு அமெரிக்கப் படைகள் சதாம் ஹுசைனைத் தேடி திக்ரித் நகரிலிருந்து 30 கிலோமீற்றர் தெற்காகவுள்ள கிராமமொன்றில் சோதனையில் ஈடுபட்டன.

தோட்டம் ஒன்றில் அமைந்திருந்த வீடொன்றை அமெரிக்கப் படைகள் சோதனையிட்டபோது நிலத்தில் சிறிய துவாரம் ஒன்றைக் கண்டுபிடித்தனர். அந்தத் துவாரம் செங்கட்டிகள் மற்றும் குப்பைகளால் உருமறைப்புச் செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து அந்த உருமறைப்புக்களை அகற்றியபோது, நிலத்துக்குக் கீழ் 6 முதல் 8 அடி ஆழமுடைய சுரங்க அறை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் சுரங்க அறையில் பரட்டைத் தலையும் நீண்ட தாடியுடனான ஒருவரையும் வேறு இருவரையும் சுமார் ஏழரை லட்சம் அமெரிக்க டொலரையும் அமெரிக்கப் படையினர் கைப்பற்றினர்.

நேற்றுமுன்தினம் இரவு 8.30 (10 ஆம் பக்கம் பார்க்க)

## லண்டன் கார் விபத்தில் கைதடி இளைஞன் பலி!

(லண்டன்)

லண்டனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கார் விபத்தில் கைதடியைச் சேர்ந்த முத்துக்குமாரசாமி - யோககுமரன் என்ற இளைஞர் மரணமடைந்தார்.

இவர் விஞ்ஞான ஆசிரியரும், யாழ். இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபருமான முத்துக்குமாரசாமியின் மகனாவார்.

லண்டனிலுள்ள விநாயகர் ஆலயத்துக்கு சென்றுவிட்டு திரும்பும் வழியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இவர் லண்டனிலுள்ள கற்பகவிநாயகர் ஆலய இந்து இளைஞர் பேரவையின் இணைப்பாளருமாவார்.

# 10 கோடி ரூபா இழப்பு ஏற்படும் போதும் தீர்வை மாற்றங்களை செய்துள்ளோம்!

## நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப் போராட்டத்துக்கு வருடாந்தம் கிடைக்கக்கூடிய பத்துக் கோடி ரூபா நிதி இழப்பு ஏற்படக்கூடிய நிலையிலும் - பொது மக்களின் நன்மை கருதி, குறிப்பிட்ட சில பொருட்களுக்கான தீர்வைவையை நீக்கவும், வேறு சில பொருட்களுக்கான தீர்வையை மாற்றம் செய்யவும் தீர்மானித்துள்ளதாக தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் செ. வ. தமிழேந்தி தெரிவித்தார்.

பொருட்கள் மீதான தீர்வை மாற்றம் தொடர்பாக, பளையில் அமைந்துள்ள காவல்துறை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது -

தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு தேவைப்படும் நிதிக்காக அறவிடப்படும் பொருட்கள் மீதான தீர்வை, சில பொருட்களுக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவரின் அத்துமீறலை தடுப்பதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகும்!

(கொழும்பு)

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பகுதி

சருடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் எனவும் தெரிவித்தார்.

## சில பொருட்கள் மீதான தீர்வை நிதித்துறையால் விலக்களிப்பு!

அடுக்க மாகக்கில் இருந்து நடைமுறைக்கு வரும்

(கொழும்பு)

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பகுதியில் அத்துமீறி மீன்பிடிப்பதைத் தவிர்க்கும் பொருட்டு, இலங்கை - இந்திய அரசாங்கங்களிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட மீன்வளத்துறை அமைச்சர் எ.ஹெட்டியாராச்சி - ஒப்பந்தம் செய்வதற்கான திட்டம் தயாரிக்கும் பணி தற்போது முடிவடைந்து வருவதாகவும், அது முடிவடைந்தவுடன் இந்திய மீன்வள அமைச்சருடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் இலங்கைக் கடற்பகுதியில் அனுமதியுடன் மீன் பிடிப்பதற்கு, இந்திய மீனவர்கள் கேட்டிருந்தனர். அதனை வழங்குவதற்கு மீன்வள அமைச்சு மறுத்தமையாலேயே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவது தாமதமாவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்திய மீனவர்கள், இலங்கைக் கடற்பகு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த மாதத்தில் இருந்து நடைமுறைக்கு வரும்

(பளை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினரால் பொருட்கள் மீது விதிக்கப்பட்ட தீர்வைகளில் சில பொருட்களுக்கான தீர்வை நீக்கப்பட்டுள்ளதாக தமிழீழ நிதித்துறை பொறுப்பாளர் தமிழேந்தி தெரிவித்தார்.

நேற்று பளையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இந்தத் தகவலை அவர் வெளியிட்டார்.

பொருளாதாரரீதியாகவும் அறிவியில் ரீதியாகவும் மக்கள் வளர்ச்சியடைவே இந்தப் பொருட்கள் மீதான தீர்வை நீக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில், உழவுத் தொழில், கால் நடை வளர்ப்பு ஆகிய தொழில்களுக்கான உள்ளீடுகள், பொறிகள், கருவிகள் ஆகியவற்றின் மீது

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு ரீதியிலேயே இலங்கைப் படைகளுக்கு பயிற்சி அளிக்கிறோம்!

## யாழ். வந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரி



(யாழ்ப்பாணம்)

இலங்கைப் படைகளுக்கு பயிற்சியளிப்பதற்காக அமெரிக்கப் படைகள் அனுப்பிவைக்கப்பட்டது இராணுவ ரீதியான நோக்கத்திற்காக அல்ல. இரு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு என்ற ரீதியிலேயே என அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரி நிக்லஸ் டீன் தெரிவித்தார்.

நேற்று யாழ்.செயலகத்தில் நடைபெற்ற அரச அதிகாரிகளுடனான சந்திப்பின்போதே இவ்வாறு அவர் தெரிவித்ததாகத் தெரியவருகிறது.

இந்தச் சந்திபின்போது யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி திலகநாயகம் போல், திட்டமிடல் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் நா. சிவபாதம், புனரமைப்பு நிவாரண அபிவிருத்தி உத்தியோகத்தர் சே. யோகநாதன் ஆகியோரும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள தெற்காசிய விவகாரப் பணியகத்தின் இந்தியா, மாலைதீவு, பூட்டான் ஆகிய நாடுகள் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நிக்கலஸ் டீன், அமெரிக்கத் தூதரக அதிகாரி கிறிஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் நிக்கலஸ் டீன் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில், மீள்குடியமர்வு தொடர்பான செயற்பாடுகள் மற்றும் இலங்கையின் தற்போதைய நிலைமை ஆகியவற்றை அவதானிப்பதற்காக இங்கு வருகை தந்தோம் எனத் தெரிவித்தார்.

அத்துடன் குடாநாட்டு நிலவரம் குறித்தும்

(10 ஆம் பக்கம் பார்க்க)






## குடாநாட்டில் 'டெங்கு' அபாயம்; 20 பேர் சிகிச்சை பெற்றனர்!

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் முதல் டெங்குக் காய்ச்சலின் தாக்கம் யாழ்.நகரப் பகுதியிலும் அதனை அண்டிய பகுதியிலும் அதிகரித்திருப்பதாகத் தெரியவருகிறது.

கடந்தவாரம் மட்டும் டெங்குக் காய்ச்சலுக்கு இலக்கான 20 பேர் வரையில் சிகிச்சை பெற்றுள்ளனர். அத்துடன் அதிகளவானோர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினால் அறிவிக்கப்பட்டுள்ள தீர்வை நீக்கம்-மாற்றங்கள்!

## 2004.01.01 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் தீர்வை மாற்றங்கள்

தீர்வை நீக்கம்

| வகை | நடைமுறையில் உள்ள தீர்வை | 01.01.2004இல் தீர்வை |
|---|---|---|
| 01 புத்தகங்கள், நாவல்கள், கதைப்புத்தகங்கள், சஞ்சிகைகள் | 20.0% | இல்லை |
| 02 வேளாண் உள்ளீடுகள் | 5.0% | இல்லை |
| 03 மீன்பிடிப்படகொட்டும் பசை | 10.0% | இல்லை |
| 04 மரங்கள் | 5.0% | இல்லை |
| 05 கால்நடை உணவு (கிலோ ஒன்றிற்கு) | ரூபா1/= | இல்லை |
| 06 படகுகள் | 5.0% | இல்லை |
| 07 வெளியிணைப்புப்பொறிகள் | 5.0% | இல்லை |
| 08 வேளாண் தொழில்சார் பொறிகள் | 5.0% | இல்லை |
| 09 கடற்தொழில் வலைகள், பிணைகள், மிதப்பிகள் | 5.0% | இல்லை |
| 10 கடற்தொழில் கருவிகள் | 10.0% | இல்லை |
| 11 மெழுகுதிரி | 25.0% | இல்லை |
| 12 கற்பூரம் | 25.0% | இல்லை |

தீர்வைக்குறைப்பு

| | வகை | நடைமுறையில் உள்ள தீர்வை | 01.01.2004 இல் தீர்வை |
|---|---|---|---|
| 01 | சுவையூட்டப்பட்ட பால் வகைகள் | 10.0% | 5.0% |
| 02 | தேயிலை, கோப்பி | 7.0% | 5.0% |
| 03 | சுவையூட்டப்பட்ட தேயிலை, கோப்பி | 10.0% | 5.0% |
| 04 | கருவாடு | 15.0% | 7.0% |
| 05 | திரைச்சேலைகள், மேசைவிரிப்புகள் | 20.0% | 10.0% |
| 06 | அலுமினியப் பொருட்கள் | 20.0% | 15.0% |
| 07 | வெள்ளிப்பொருட்கள் | 20.0% | 15.0% |
| 08 | கல்வனைசு வாளிகள் | 20.0% | 15.0% |
| 09 | ஏனைய வீட்டுப்பயன்பாட்டுப்பொருட்கள் | 20.0% | 15.0% |

## 2003.12.15 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் தீர்வை மாற்றங்கள்

கூடுதல் தீர்வை

| | வகை | நடைமுறையில் உள்ள தீர்வை | 15.12.2003 இல் தீர்வை |
|---|---|---|---|
| 01 | கோழி இறைச்சியும், இறைச்சிக்கோழியும் | 10.0% | 15.0% |
| 02 | கோழி முட்டை ஒன்றிற்கு | ரூபா1/= | ரூபா2/= |

## தீர்வைக் கணிப்புமுறை மாற்றம்

| | | |
|---|---|---|
| 01 இறக்குமதி அரிசி | நடைமுறையில் உள்ள தீர்வை (கிலோ ஒன்றிற்கு) ரூபா1/= | 15.12.2004 இல் தீர்வை (பெறுமதிக்கு) 7.0% |
| 02 உராய்வு நீக்கிகள் | நடைமுறையில் உள்ள தீர்வை (இலீற்றர் ஒன்றிற்கு) ரூபா5/= | 15.12.2004 இல் தீர்வை (பெறுமதிக்கு) 7.5% |

## தீர்வைப்பட்டியல்

| வகை | தீர்வை |
|---|---|
| 01 குழந்தைகளுக்கான உணவு வகைகள்<br>★ லக்ரோயன்- தரம் 1<br>★ லக்ரோயன் - தரம் 2<br>★ எஸ்.எம்.ஏ (SMA)<br>★ செரிலக்<br>★ நெஸ்ரம் (NESTAM)<br>★ குழந்தைகளுக்கான விசுக்கோத்து | இல்லை |
| 02 பால் மா வகைகள், சுவையூட்டப்பட்ட பால்வகைள் | 5.0% |
| 03 கருவுற்ற தாய்மாருக்கான ஊட்டப்பொருளும், உணவுவகையும்<br>★ அன்மம்<br>★ திரிபோசா<br>★ குங்குமப் பூ | இல்லை |
| 04 ஊட்டப்பொருள்கள் | 5.0% |
| 05 தேயிலை, கோப்பி | 5.0% |
| 06 இறக்குமதி அரிசி | 7.0% |
| 07 கோதுமை மா | 7.0% |
| 08 இனிப்பூட்டிகள் (சீனி, சர்க்கரை, வெல்லம், கற்கண்டு, பனங்கட்டி) | 7.0% |
| 09 கூலம், பருப்பு வகை உட்படப் பலசரக்குப் பொருட்கள் | 7.0% |
| 10 கருவாடு | 7.0% |
| 11 தேங்காய்நெய் உட்பட உணவு நெய் வகை | 10.0% |
| 12 பழங்கள் | 10.0% |
| 13 கொப்பரா | 10.0% |
| 14 வெதுப்பகப் பொருட்கள் | 10.0% |
| 15 மரக்கறிகள் - லீக்சு, போஞ்சி, கரட் | இல்லை |
| 16 ஏனைய மரக்கறி, கிழங்கு வகைகள் | 15.0% |
| 17 கோழிஇறைச்சியும் இறைச்சிக்கோழியும் | 15.0% |
| 18 மென்பருகை | 15.0% |
| 19 இனிப்பு வகை | 15.0% |
| 20 விசுக்கோத்துவகைகளும் குளிர்க்களிக் குழாய்களும் | 15.0% |
| 21 பதப்படுத்தப்பட்டுப் பொதிசெய்யப்பட்ட உணவு வகைகள் | 15.0% |
| 22 கோழி முட்டை (ஒன்றிற்கு) | ரூபா 2/= |
| 23 தேங்காய் (ஒன்றிற்கு) | ரூபா 1/= |
| 24 மருத்துவ உணவுப்பொருட்கள்<br>★ ஆட்டாமா, ஆட்டா அரிசி<br>★ தேன்<br>★ வேப்பெண்நெய், ஆமணக்கெண்நெய், இலுப்பெண்நெய்<br>★ அயடீன் கலந்த உப்பு | இல்லை |
| 25 பனிக்கட்டி | இல்லை |
| 26 கனியுப்புக்கலந்த நீர் | இல்லை |
| 01 மருந்து வகைகள் | இல்லை |
| 02 மருத்துவக் கருவிகள் | இல்லை |
| 01 புடைவைவகைகள் | 10.0% |
| 02 றெக்சீன் | 10.0% |
| 03 திரைச்சேலைகள், மேசை விரிப்புகள் | 10.0% |
| 04 நூல்வகைகள் | 10.0% |
| 01 தூய்மைத் துணி | இல்லை |
| 02 தொற்று நீக்கிகளும் பூச்சிக்கொல்லிகளும் | 7.0% |
| 03 வழலை | 8.0% |
| 04 வழலைத் தூள் | 8.0% |
| 05 ஏனைய தூய்மைபேண் பொருட்கள் | 10.0% |
| 01 மாணவர் பயிற்சிப் புத்தகங்கள், பாடப்புத்தகங்கள், படங்கள் | இல்லை |
| 02 மாணவப் பயிற்சிக்கொப்பிகள் (சீ.ஆர்.கொப்பி தவிர்ந்தவை) | இல்லை |
| 03 செய்தித்தாள்கள் | இல்லை |
| 04 புத்தகங்கள், நாவல்கள், கதைப்புத்தகங்கள், சஞ்சிகைகள் | இல்லை |
| 05 சீர்.ஆர் கொப்பி, புள்காப் தாள், ஏனைய தாள் வகைகள் | 20.0% |
| 06 ஏனைய அச்சிட்ட தாள், படம், நாட்குறிப்பு, நாள்காட்டி | 20.0% |
| 01 மணல், கல் | இல்லை |
| 02 மரங்கள், தீராந்திகள், றீப்பைகள் | இல்லை |
| 03 கூடாரத்துணி | 10.0% |
| 04 ஓடு (ஒன்றிற்கு) | ரூபா 1/= |
| 05 சீமெந்து (ரூபா 350 /= இற்கு உட்பட்டவை) (பை ஒன்றிற்கு) | ரூபா 50/= |
| 06 சீமெந்து (ரூபா 350 /= இற்கு மேற்பட்டவை) | 15.0% |
| 07 கட்டடப்பொருட்கள் | 15.0% |
| 08 மைவகைகள் | 15.0% |
| 09 ஒட்டுப்பலகை | 15.0% |
| 01 வேளாண் உள்ளீடுகள்<br>★ உரவகை<br>★ பூச்சிகொல்லிகள்<br>★ களைகொல்லிகள் | இல்லை |
| 02 மீன்பிடிப்படகொட்டும் பசை | இல்லை |
| 03 ஏனைய இரசாயனங்கள் | 15.0% |
| 01 வளர்ப்பிற்கான விலங்குகள், பறவைகள், மீன்கள் | இல்லை |
| 02 கால்நடை உணவு<br>★ தவிடு, பிண்ணாக்கு<br>★ கோழித்தீன்<br>★ கருவாட்டுத்தூள் | இல்லை |
| 03 கால்நடை மருந்துகள் | இல்லை |
| 01 பயன்தரு மரங்கள், நாற்றுகள் | இல்லை |
| 02 விதைகள் | இல்லை |
| 01 பாய்வகை | 10.0% |
| 02 அலுமினியப்பொருட்கள், வெள்ளிப்பொருட்கள் | 15.0% |
| 03 கல்வனைசு வாளிகள் | 15.0% |
| 04 ஏனைய, வீட்டுப்பயன்பாட்டுப்பொருட்கள் | 15.0% |
| 01 அணைகலங்கள் | 20.0% |
| 01 குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்கள் | இல்லை |
| 02 விளையாட்டுப்பொருட்களும் கருவிகளும் | 10.0% |
| 01 படகுகள்<br>★ வள்ளம்<br>★ கன்னார்ப்படகு<br>★ இழுவைப்படகு<br>★ ஏனையபடகுகள் | இல்லை |
| 01 மாட்டுவண்டி, குதிரைவண்டி | இல்லை |
| 02 மூன்றுசில்லு உருளிகள் | இல்லை |
| 03 ஈருருளிகள் | 7.5% |
| 04 உந்துருளிகள் | 7.5% |
| 05 உழவுச்சிற்றூர்த்திகள், உழவுச்சிற்றூர்திப்பெட்டிகள் | 7.5% |
| 06 இழுபொறிகள், இழுபொறிப் பெட்டிகள் | 7.5% |
| 07 ஏனைய ஊர்திகள் | 10.0% |
| 01 வெளியிணைப்புப் பொறிகள் | இல்லை |
| 02 வேளாண் தொழில்சார் பொறிகள்<br>★ நீர் இறைக்கும் மோட்டார்<br>★ ஏனைய, வேளாண்பொறிகள்<br>★ நீர் இறைக்கும் பொறி<br>★ நெல்லுவெட்டும் பொறி | இல்லை |
| 03 தொழில்சார் பொறிகள் | 10.0% |
| 04 அலுவலகப்பொறிகள் | 15.0% |
| 01 கடற்றொழில் கருவிகள்<br>★ வலைகள், பிணைகள், மிதப்பிகள், கருவிகள் | இல்லை |
| 02 வேளாண்தொழில்சார் கருவிகள்<br>★ சொட்டுநீர்ப்பாசனக் கருவிகளும், குழாய்வகைகளும்<br>★ கப்ளிங், புட்வால்வ்<br>★ அல்கத்தீன் குழாயும் இணைப்பும்<br>★ தெளிகருவி<br>★ மண்வெட்டி, முள்ளு மண்வெட்டி<br>★ அரிவாள்<br>★ காட்டுக்கத்தி<br>★ கலப்பை | இல்லை |
| 03 தொழில்சார் கருவிகள் | 10.0% |
| 04 மளிக்கும் கருவிகள் | 10.0% |
| 05 நிறுத்தல், முகத்தல் அளவைக்கருவிகள் | 10.0% |
| 06 அலுவலகக்கருவிகள் | 20.0% |
| 07 மாணவர் பயன்பாட்டுக்கருவிகள்<br>★ சோக், சித்திரக்கலர், தூரிகை<br>★ கருவிப்பெட்டி, சீவிலிக்கூடு, அடிமட்டம்<br>★ பென்சில், பேனா, அழிஇறப்பர் | இல்லை |
| 01 வெளியிணைப்புப் பொறி உதிரிகள் | 10.0% |
| 02 இழுபொறி உதிரிகள் | 10.0% |
| 03 உழவுச் சிற்றூர்த்தி உதிரிகள் | 10.0% |
| 04 ஊர்தி உதிரிகள், பொறி உதிரிகள் | 15.0% |
| 01 விறகு | இல்லை |
| 02 மண்நெய் | இல்லை |
| 03 பெற்றோல் (இலீற்றர் ஒன்றிற்கு) | ரூபா 5/= |
| 04 டீசல் (இலீற்றர் ஒன்றிற்கு) | ரூபா 5/= |
| 05 உராய்வு நீக்கிகள் | 7.5% |
| 06 சமையல் எரிவாயு | 12.5% |
| 07 தீப்பெட்டி | ரூபா 0.25/= |
| 01 மின்னியற்பொருட்களும் உதிரிகளும் | 15.0% |
| 02 இலத்திரனியற் பொருள்களும் உதிரிகளும் | 15.0% |
| 03 மின்கலங்கள் | 15.0% |
| 01 கதிரொளி மின்னாக்கித் தொகுதி | 12.5% |
| 01 பொதிகட்டும் தாள்களும் தாட்பைகளும் | 10.0% |
| 02 சாக்கு, நெகிழப்பை (கிலோ ரூபா 50/= இற்கு உட்பட்டவை) | ரூபா 0.50/= |
| 03 சாக்கு, நெகிழப்பை (கிலோ ரூபா 50/= இற்குமேற்பட்டவை) | ரூபா 1 /= |
| 04 உணவத்தாள் சொப்பிங்பை, பொலித்தீன் | 20.0% |
| 05 மதுபான, குளிர்பானப் போத்தல் மூடிகள் | 10.0% |
| 06 வெற்றுக் கலன்கள் | 10.0% |
| 07 காஸ்சிலின்டர் | இல்லை |
| 01 தும்புக்கயிறு | 10.0% |
| 02 நைலோன் கயிறு | 10.0% |
| 03 சணல் | 10.0% |
| 01 காலணிகள் | 10.0% |
| 01 அணிகலன்கள் | 15.0% |
| 02 அழகூட்டும் மெருகூட்டும் பொருட்கள் | 20.0% |
| 01 வெற்றிலை, பாக்கு | 10.0% |
| 01 வெண்சுருட்டு (ஒன்றிற்கு) | உரூபா 0.35 /= |
| 02 பீடி, சுருட்டு | 20.0% |
| 03 மதுபானம் | 25.0% |
| 04 லேகியம் | 25.0% |
| 01 மெழுகுதிரி | இல்லை |
| 01 கற்பூரம் | இல்லை |
| 01 பத்தி, சாம்பிராணி, தசாங்கம் | 25.0% |
| 01 வெடி | 25.0% |
| 01 ஏனையவை | 15.0% |

## அத்துருகிரியவில் இரகசிய மறைவிடத்தை

# அம்பலப்படுத்தியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்!

### சிஹல உறுமய தலைவர் திலக் கருணாரட்ன கூறுகிறார்



அத்துருகிரிய மிலேனியம் சிற்றியில் அமைந்திருந்த இராணுவத்தினரின் இரகசிய ஆயுதமுகாமை, வெளியில் அம்பலப்படுத்தியவர்களுக்கெதிராக உடனடியாக நடவடிக்கை எடுககவேண்டுமென சிஹல உறுமய - ஜனாதிபதி சந்திகாவை கோரியுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் தலைவரான திலக் கருணாரட்ண தெரிவிக்கையில்- இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களுக்கான தண்டனையை வழங்கும்நேரம் தற்போது வந்துள்ளது. இவ்வாறு இவர்களுக்கெதிரான தண்டனையை வழங்கும்போது, எவரும் அவர்களது தண்டனையை நிறுத்தக்கூடாது.

இந்த விடயம் தொடர்பாக விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட குழு போதுமானதாக இல்லை. இது தொடர்பில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கெதிராகக் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

இதேவேளை, ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழுவினர், இந்தச் சம்பவம் தொடர்பாகப் பிரதமர், உள்துறை அமைச்சர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரைச் குற்றம்சாட்டியுள்ளனர்.

## புலனாய்வுச் சேவை அணிகளில் இன்றுமுதல் முக்கிய மாற்றங்கள்!

(கொழும்பு)

இலங்கையின் புலனாய்வுச் சேவைகளில் முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த மாற்றங்கள் இன்றுமுதல் நடைமுறைக்கு வருவதாகத் தெரியவருகின்றது.

உள்ளக புலனாய்வுப் பணியகத்தின் இயக்குநராகப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கீர்த்தி கஜநாயக்க பதவியேற்றுள்ளார். குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் முனனாள் இயக்குநரான இவர், புலனாய்வு தொடர்பான பயிற்சிகளைப் பிரிட்டனின் எம்.ஐ.5 புலனாய்வு அமைப்பிடம் பெற்றிருந்தார்.

உள்ளக புலனாய்வுப் பணியகத்தின் இயக்குநரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் பீலிக்ஸ் அலஸ் - பொலிஸ் தலைமையகத்தில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கீர்த்தி கஜநாயக்க வகித்து வந்த பொறுப்புக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

மேலும், உள்ளக புலனாய்வுப் பணியகத்தில் பணியாற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் பலர் இடமாற்றப்பட்டுள்ளனர். அத்துடன், குற்றப்புலனாய்வுப் பணியகத்திலும் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

## இலங்கையில் நோர்வே அரசு

# மதச்சார்பான நடவடிக்கையின் நிமிர்த்தமே செயற்படுகின்றது!

### ஜே.வி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் குற்றச்சாட்டு

நோர்வே நாடு - இலங்கையில் மதச்சார்பான நடவடிக்கையின் நிமிர்த்தமே செயற்படுகின்றது என, ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஞ்சான் உம்மா குற்றம் சுமத்தியுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி - நாடளாவிய ரீதியில் பல கூட்டங்களை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளது. இதன் ஆரம்பகூட்டம் நேற்று முன்தினம் புத்தளத்தில் நடைபெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்.

நோர்வே நாடு - இலங்கையில் மதச்சார்பான நடவடிக்கையின் நிமிர்த்தமே தனது பங்களிப்பை மேற்கொண்டுவருகின்றது. இதற்கு அமைச்சர்களான ஜீ.எல் பீரிஸ் மற்றும் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோர் ஆதரவு வழங்கிவருவதாகவும், மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஞ்சான் உம்மா குற்றம் சுமத்தியுள்ளார். இஸ்ரேல் நாட்டிற்கு நோர்வே உதவியளித்ததன் காரணமாகவே, பலஸ்தீனர்கள் இஸ்ரேலினால் தாக்கப்பட்டனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கிழக்கில் முஸ்லிம்களின் பாதுகாப்பைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் உறுதிப்படுத்தமுடியாது. மேற்கத்தைய நாடுகளின் உதவியுடன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தனியான நாட்டை வழங்கும் நடவடிக்கையில் பிரதமர் ஈடுபட்டுள்ளார். அவர் அமெரிக்காவின் வழிநடத்தலில்தான் செயற்படுகின்றார். இனப்பிரச்சினை தீர்வை - நோர்வேயும் ஏனைய மேற்கத்தேய நாடுகளும் தலையிடுவதனால், சமாதானம் என்றபெயரில் மீண்டும் இனங்களுக்கு இடையில் போர் ஒன்று ஏற்படவாய்ப்பு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## பல்வேறு காரணங்களால்

# இலங்கையில் 57 ஆயிரம் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை!

### ஆய்வின்மூலம் தெரியவந்தது

(கொழும்பு)

இலங்கையில் 57 ஆயிரம் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் இருப்பதாக, யுனிசெப் நிறுவனத்துடன் கல்வியமைச்சு இணைந்து நடத்திய ஆய்வின்மூலம் தெரியவந்துள்ளது.

இவர்கள் 5 வயதுக்கும் 10 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்கள் என்றும், கல்வியமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 15 ஆயிரம் பேர் பாடசாலைகளில் இருந்து பல்வேறு காரணங்களால் இடைவிலகி இருக்கின்றனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியான பாதிப்பு, யுத்தக் காரணிகள் போன்ற நடவடிக்கைகளே இவர்களின் இடைவிலகலுக்குரிய காரணங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

சமூகத்தில் மாற்றுக் காரணிகளாக - எதையும் செய்யமுடியாதவர்களாகத் தொடர்ந்தும் இவர்கள் வளர்ந்துவருவதாக இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் வடக்கு- கிழக்கில் மட்டும், 35 ஆயிரம் மாணவர்கள் பாடசாலைக்கு செல்லாமல் இருக்கின்றனர் என்றும், இதில் 12 ஆயிரத்து 500 பேர் பாடசாலைகளிலிருந்து இடைவிலகியிருப்பதாகவும் கல்வியமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (01)

# இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அரசியல் தலைவர்கள் ஒன்றிணையவேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் தென்பகுதியில் இருக்கும் அரசியல் தலைவர்கள் ஒரு பொதுஇணக்கத்திற்கு வரவேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது. அவ்வாறான ஒரு பொது இணக்கப்பாட்டுக்கு வரும்போதுதான், இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவ்வாறான ஒரு தீர்வுக்கு வரமுடியாவிட்டால், எதிர்காலத்தில் இலங்கையின் நிலை கேள்விக்குரியதாகமாறும் என்று ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஏற்கனவே, இருந்த அரசாங்கங்கள் ஏற்படுத்திக்கொண்ட சிறு பிழையான நடவடிக்கையால்தான், இன்று இந்த இனப்பிரச்சினை அதிக தூரம் வளர்ந்துள்ளது என்றும், இதனை அடிப்படையாகக் கொண்டு தென்னிலங்கை அரசியல்வாதிகள் தம்மிடையே இணக்கம் ஒன்றை ஏற்படுத்தி, இனப்பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்றும், அவ்வாறு பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் அது நாட்டிற்கு சாபக்கேடான விடயமாக அமைந்துவிடும்.

ஒவ்வொரு விநாடியும் இனப்பிரச்சினைத் தீர்வில் காலதாமதத்தை ஏற்படுத்திக்கொண்டு சென்றால், இலங்கையின் எதிர்காலத்தை அது பாதிகும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (01)

## தரம் 6 இற்கு புதிய புத்தகம்

கல்வி அமைச்சு எதிர்வரும் முதலாம் திகதி முதல் புதிய பாடத்திட்டதிற்கு அமைவான புத்தகங்களை தரம் 6 இற்கு வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது. இது தொடர்பாக கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும தெரிவித்ததாவது - ஒரு பரீட்சார்த்தமான முறையாக முதல் கட்டமாக தரம் 6 இற்கு இந்தப பாடத்திட்டங்களை அறிமுகபபடுத்தவுள்ளது.

இதற்கு அமைவாக ஒரு பாடத்திற்கு மூன்று புத்தகம் வழங்கப்படும் எனவும், அவற்றில் ஒன்றையே மாணவன் பெறமுடியும். ஏனைய இரு புத்தகங்களும் பாடசாலை நூலகத்தில் வைக்கப்பட்டு இருக்கும். தேவையேற்படும்போது மாணவர்கள் பெற்றுப் படிக்கமுடியும்.

எதிர்வரும் காலத்தில் ஏனைய தரங்களிற்கும் இந்த நடைமுறையை கைக்கொள்ளக் உத்தேசித்து இருப்பதாகவும், எனினும் இதுவொரு பரிசீலனைத்திட்டமே எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பாடப்புத்தக்ங்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் மொழிகளில் அச்சிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சுகாதார ஊழியர் போராட்டம் தொடர்கிறது

சுகாதார ஊழியர்சேவை ஊழியர்களின் போராட்டம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என- அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

சம்பள முரண்பாடு உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (01)

# விதை உருளைக்கிழங்கு இறக்குமதியில் 135 மில்லியன் ரூபா மோசடி கண்டுபிடிப்பு!

(கொழும்பு)

ஊவா மாகாணசபையில் விதை உருளைக்கிழங்கு இறக்குமதியில் இடம்பெற்றுள்ள 135 மில்லியன் ரூபா ஊழல் தொடர்பாக, ஜனாதிபதி செயலகததின் ஊழல் விசாரணைப் பிரிவு- விசாரணை அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளது.

இதனையடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - ஊவா மாகாண முதலமைச்சர் ஏ.எம்.புத்தானந்த மற்றும் விவசாய அமைச்சர் கீர்த்தி சிறி சேனாரதன அத்தனாயக்க ஆகியோரை இந்த ஊழல் குறித்து உடனடியாக அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வருடம் ஊவா மாகாண சபை - 135 மில்லியன் ரூபாவுக்கு நெதர்லாந்திலிருந்து விதை உருளைக்கிழங்கை இறக்குமதி செய்திருந்தது. ஊவா மாகாணத்தைச் சேர்ந்த குழுவொன்று, இந்த இறக்குமதி தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள நெதர்லாந்து சென்றிருந்தது.

முதலமைச்சர், நீர்ப்பாசனத் திணைக்கள முன்னாள் செயலாளர் மற்றும் இன்னொருவரும் இந்தக் குழுவில் நெதர்லாந்து சென்றிருந்தனர். இந்தக் குழுவில் விதை உருளைக்கிழங்கு இறக்குமதி - தரம் வாய்ந்ததா என்பதை உறுதிப்படுத்தக்கூடிய எந்த அறிக்கையும் இடம் பெறவில்லை என்பதுடன் -

இந்தக் குழுவினர் விதை உருளைக்கிழங்கைப் பார்வையிட்டு, பரிசீலிக்காமலே விதை உருளைக் கிழங்கு இறக்குமதிக்கான அனுமதியை வழங்கியதாக, ஜனாதிபதி செயலக விசாரணைப்பிரிவு தனது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பாதுகாப்பு அமைச்சை வைத்திருக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை!

### பிரதமர் ரணில் கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கை அரசியலமைப்பின் பிரகாரம் - பாதுகாப்பு அமைச்சை தம்வசம் வைத்திருக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது என்று, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு சுகததாஸ உள்ளரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 49 ஆவது தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான மக்கள் ஆணை ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்துள்ளதாக அங்கு குறிப்பிட்ட பிரதமர், அந்த ஆணையின்படியே தாம் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதாகவும், அந்த மக்கள் ஆணையை புறக்கணிக்கும் அதிகாரம் யாருக்கும் கிடையாது என்றும் தெரிவித்தார்.

சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்கின்ற மக்கள் ஆணையின் பிரகாரம் செயற்பட்டுவந்த தமது அரசாங்கத்துக்கு, பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றதன்மூலம் ஜனாதிபதி நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளதாகவும் பிரதமர் அங்கு குறிப்பிட்டுள்ளார்.

இதனால் சமாதான முயற்சிகளைத் தொடரமுடியாத நிலை தோன்றியுள்ளதாகவும், இது தமக்கு வழங்கப்பட்ட மக்கள் ஆணையை புறக்கணிக்கும் ஒரு செயல் என்றும், பிரதமர் மேலும் தெரிவித்தார்.

# வைத்தியசாலை சுகாதார ஊழியர்கள் இன்று அடையாள வேலைநிறுத்தம்!

அரசாங்க வைத்தியசாலைகளில் பணிபுரியும் சுகாதார ஊழியர்கள் - இன்று திங்கட்கிழமை ஒருநாள் அடையாள வேலை நிறுத்ததில் ஈடுபடப்போவதாகச் சுகாதார சேவைகள் தொழிற்சங்க சம்மேளனம் அறிவித்துள்ளது.

தாம் முன்வைத்த கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்றத் தவறியுள்ளதாலேயே, சுகாதார சேவை தொழிற்சங்க சம்மேளனத்தின் நிறைவேற்றுக்குழு இந்த முடிவை நேற்று முன்தினம் எடுத்திருந்தது

இது தொடர்பாக இந்த தொழிற்சங்க சம்மேளனத் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவிக்கையில் - அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டபடி பத்துவீத சம்பள அதிகரிப்பை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. எமக்குத் தரவேண்டிய சம்பள நிலுவைகளை 1997 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து தரவேண்டும்.

அத்துடன், சுகாதார சேவைகள் தொழிற்சங்கத்தை சேர்ந்தவர்களின் கோரிக்கை எதையும் மந்திரிசபை ஏற்றுக்கொள்ள வில்லை. எனவே, அதிகரித்த சம்பளத் தொகையுடன், ஐம்பது வீத நிலுவையும் சேர்த்து வழங்கப்பட வேண்டும்.

சம உரிமையற்ற இந்த நடவடிக்கைக்கு எதிராக நாடாளு மன்றத்தின் முன் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்வுள்ளோம் எனவும் அவர் தெரவித்தார்.

சுகாதார தொழிற்சங்க ஊழியர்களின் இந்த எதிர்ப்பு நடவடிக்கை தொடர்பாகக் கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன - இவர்களின் இந்தப் போராட்டம் ஏற்றுக்கொள்ளமுடியாதது. அரசாங்கத்தின் சம்பள அதிகரிப்பு, சகல அரச ஊழியர்களுக்கானதே. இவர்களின் இந்த நடவடிக்கையைப் பொது மக்கள் எவரும் வரவேற்கமாட்டார்கள் எனவும் தெரிவித்தார்.



நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்கான புதிய சமுர்த்தி வங்கிச் சங்கக் கட்டடத்திற்கான அடிக்கல்லை - நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ச.பேரானந்தன் நாட்டுவதையும், அருகில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பொதுமக்களையும் காணலாம். (113)

# சுகாதார சீர்கேடுகளின் மையமாக மாறிவரும் மாநகரசபைப் பகுதி

## பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தெரிவிப்பு

வடக்கு - கிழக்கு மாகாண பகுதியில் மிகவும் பின்தங்கிய இடமாக யாழ்.மாநகரசபை எல்லைக் குட்பட்ட பகுதி மாறிவருகிறது.

இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும் என யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

புனர்வாழ்வு புனரமைப்பு, மீள்குடியமர்த்துகை அமைச்சு மேற்கொள்ளவுள்ள "நோராட்" திட்டம் பற்றிய ஆய்வுக்கருத்தரங்கொன்று, நேற்று முன்தினம் யாழ்.பஸ்தியான் ஹோட்டலில் நடைபெற்றது. அமைச்சின் மேலதிக செயலாளர் க.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை தொடர்ந்து உரையாற்றுகையில் -

மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களானது - சுகாதார சீர்கேடுகளின் மையமாக மாறிவருகிறது. நகரின் முக்கிய இடங்கள் எல்லாம் குப்பைகொட்டும் மையங்களாக மாறிவருகிறன. இன்றைய சூழ்நிலையில் யாழ்ப்பாணம் என்ற ஒரு பழைமையான பெயரை வைத்துக்கொண்டே, மாநகரசபையினர் தமது பெருமையை நிலைநாட்டிவருகின்றனர்.

ஆரியகுளத்திலிருந்து யாழ். பொலிஸ்நிலையம், பொதுநூலகம் என்பவற்றினூடாகக் கடலைச் சென்றடையும் கழிவு வாய்க்கால்கள் - மிகவும் மோசமான நிலையிலேயே அமைந்துள்ளன. இந்தக் கழிவு வாய்க்கால்கள் - நவீன தொழில்நுட்ப முறைகளைப் பாவித்து சீர் செய்யப்படவேண்டும்.

மாநகரசபை எல்லைக்குள் முன்னர் அமைந்திருந்த நீர்த்தேக்கங்கள் பல, இன்று இருந்த இடம்தெரியாமல் உள்ளன. அவை இருந்த இடத்திலே வியாபார நிலையங்களும், வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த விடயத்தில், மாநகரசபை சில சட்டச் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.

மாநகரசபை எல்லைக்குள் வாழும் மக்களுள் பெரும்பாலானவர்கள் - தமது வீட்டுக் கழிவுகளையெல்லாம் எவ்வித சிந்தனைகளுமின்றி, வீதிகளிலேயே கொட்டுகிறார்கள். அவற்றை அகற்றவேண்டியது மாநகரசபையின் கடமையெனவும் அவர்கள் எண்ணுகிறார்கள். இது தவறானது.

குலைபோட்ட வாழைமரக் கழிவுகளையும், மாமரத்தில் படரும் குருவிச்சைக் கழிவுகளையும் அகற்ற வேண்டியது மாநகரசபையின் கடமையல்ல. சமையலறைக் கழிவுகளையும், வேறு சில வீட்டுக் கழிவுகளையும் அகற்றுவதே அவர்களின் கடமை. இதை மக்கள் உணர வேண்டும்.

குடாநாட்டில் வருடாந்தம் பெய்யும் மழைநீரை - நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி சேமித்து வைக்கும்போது, கோடை காலங்களில் வயல் நிலங்களில் உப உணவுப் பயிர்களைச் செய்கை பண்ணமுடியும். இதன்மூலம், எமது விவசாயிகளின் பொருளாதாரம் மேம்பாடடையும் எனவும் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக் கருத்தரங்கில் புனர்வாழ்வு புனரமைப்பு மீள்குடிமர்த்துகை அமைச்சை சேர்ந்த அதிகாரிகள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பொறியியலாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

குடாநாட்டில் - நீர்வளப் பாதுகாப்பு, சூழல் முகாமைத்துவம் என்பவற்றில் மேற்கொள்ளவேண்டிய செயற்திட்டங்கள் என்பன தொடர்பாகப் பலரும் தமது கருத்துக்களை இந்தக் கருத்தரங்கில் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தென்மராட்சியில் மீளக்குடியமர்ந்தோருக்கு இருபத்தைந்து ஆயிரம் ரூபா கொடுப்பனவு

தென்மராட்சி பிரதேசத்தில் மீள குடியமர்வுக் கொடுப்பனவாக - 25 ஆயிரம் ரூபா - 15 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கொடுப்பனவு பெறுவதற்குத் தெரிவுசெய்யப்பட்டோரின் பெயர் பட்டியல்கள் - தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு யாழ். செயலக திட்டமிடல் பிரிவினரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி நகரம், மீசாலை மேற்கு, கைதடி, நாவற்குழி மேற்கு, நாவற்குழி கிழக்கு, கச்சாய், பலாலி, அல்லாரை, தாவளை, இயற்றாளை வெள்ளாம்போக்கட்டி, மீசாலை வடக்கு, இராமாவில், மட்டுவில் மத்தி, மட்டுவில் கிழக்கு, கரம்பைகுறிச்சி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கே இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. (34)

# சமாதானம் பற்றிய விழிப்புணர்வு பேரணி

கியூடெக் நிறுவனத்தின் சமாதான உயிர்ப்பூட்டல் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட, கிராம மக்களிடையே சமாதானம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பேரணி - எதிர்வரும் 18, 20 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

சுதுமலையில் எதிர்வரும் 18 ஆம் திகதியும், இளவாலை மாரீசன் கூடல் பகுதியில் எதிர்வரும் 20 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளது. இந்தப் பேரணியில் - குடும்ப, சமூக, கிராமிய உறவை சமாதான சிந்தனை மூலம் ஏற்படுத்தவே ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

சிறுவர்கள் சமாதானம் தொடர்பான கருத்துக்களைத் தாங்கிய சுலோகங்களையும், பெற்றோர் தீபங்களை ஏந்தியவாறும் பவனியாக வந்து, சர்வ மதக்குருமாரின் கருத்துரைகளுடன் இந்நிகழ்வு நிறைவுபெறவுள்ளது.

இதன்மூலம் கிராமியரீதியில், சுமுகமான உறவை ஏற்படுத்தவுள்ளதாகவும் கியூடெக் நிறுவன இணைப்பாளர் ஜோசப்பாலா தெரிவித்தார். (91)

## சின்னஞ்சிறு செய்திகள்

### மனிதவள அபிவிருத்திப் பயிற்சி நெறியின் இறுதிப்பரீட்சை.

(யாழ்ப்பாணம்)

மனிதவள அபிவிருத்தி நிலையத்தால் நடாத்தப்பட்ட பயிற்சி நெறியில் பங்கு பற்றியவர்களுக்கான இறுதிப்பரீட்சை - எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு - யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறியில் பங்கு பற்றிய மாணவர்கள் அனைவரும் தவறாது எழுத்துப் பரீட்சையில் கலந்துகொள்ளுமாறு இந்த நிலையத்தினர் கேட்டுள்ளனர். (91)

### வலி.வடக்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி - வடக்கு விசேட ஒருங்கிணைப்புக்குழு - நாளை செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்குத் தெல்லிப்பளை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இடம் பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மக்களது அவசிய தேவைகளை இனங்காணுதல், அவற்றை ஈடுசெய்வதன்மூலம், அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான துரித அபிவிருத்தித்திட்டம் ஒன்றினைத் தயாரிப்பதற்கான ஆலோசனைகளைப் பெறுவதற்காக இந்த ஒருங்கிணைப்புக்குழு கூடுகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள். கிராமியமட்டத் தலைவர்கள் முதலிய அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகம்தருமாறு பிரதேச செயலாளர் கேட்டுக்கொணடுள்ளார்.

### கல்வயல் விநாயகர் தேவஸ்தான விசேட பூஜைகள்

(மட்டுவில்)

கல்வயல் அருள்மிகு வேதவன விநாயகர் தேவஸ்தானத்தில், விநாயகர் விரதத்தை முன்னிட்டு, கடந்த செவ்வாய்க்கிழமை முதல் தினந்தோறும் பிற்பகல் 3 மணி தொடக்கம் விசேட அபிஷேக ஆராதனையும், இலட்சார்ச்சனையும் இடம் பெற்றுவருகின்றன.

இறுதி நாளான இந்தமாதம் 28 ஆம் திகதியன்று, மாலை மகா கணபதி ஹோமம் இடம்பெற்று, விநாயகவிரத இலட்சார்ச்சனை வைபவம் இனிது நிறைவுறும். மறு நாள் 29 ஆம் திகதிமுதல் திருவேம்பாவை அலங்கார உற்சவம் ஆரம்பமாகி, 9 ஆம் நாள் இரதோற்சவமும், மறுநாள் திருவாதிரை தினத்தன்று தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (24)

### குதிரை வாகனம் திருட்டு

பன்னாலை வர்த்தலம் கற்பக விநாயகர் ஆலயத்தில், கடந்த சனிக்கிழமை இரவு மழைபெய்து கொண்டிருந்தவேளையில், குதிரை வாகனம் ஒன்று திருடப்பட்டுள்ளது. இந்த ஆலயத்தில் ஐந்து மாதங்களுக்கு முன்னர் பிள்ளையாலர் சிலையொன்று திருடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (72)

### திருட்டு சந்தேக நபருக்கு விளக்கமறியல்

கடந்த சில வாரங்களாகத் தொடர்ச்சியாகக் கரணவாயில் இடம்பெற்ற பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்பட்ட கரணவாய் நொத்தாரிஸ் தோட்டம் கொலனியைச் சேர்ந்த ஒருவரை, நெல்லியடி பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார். (116)

### சுயதொழில் முயற்சிகளுக்கான பயிற்சிப்பட்டறை

மிதிவெடியால் பாதிப்புற்று, சுயதொழில் முயற்சிக்கடன் பெற்ற பயனாளிகளுக்கான சுயதொழில் முயற்சி சம்பந்தமான பயிற்சிப்பட்டறை - இன்று திங்கட்கிழமை காலை கச்சேரி வீதியில் அமைந்துள்ள வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன், சர்வவோதய நிறுவனம் - மிதிவெடியால் பாதிப்புற்று சுயதொழில் முயற்சிக் கடன் பெற்ற 100 பயனாளிகளுக்கான சுயதொழில் முயற்சிக்குக் கடன்களை வழங்கியிருந்தது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்ளவிருக்கும் பயனாளிகளின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்குக் கல்வி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது எனவும், திட்ட இணைப்பாளர் தெரிவிக்கின்றார். (44)

### விடுமுறை தினங்களிலும் வர்த்தகநிலையங்கள் திறக்கலாம்

நத்தார், புதுவருடத்தினை முன்னிட்டு, இருவாரத்திற்கு விடுமுறை தினங்களிலும் கடைகள் திறந்து வியாபாரம் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் நத்தார், புதுவருட பண்டிகை தினத்தை முன்னிட்டு, எதிர்வரும் 28 ஆம் திகதிவரை சனி முழுநாள், ஞாயிறு மற்றும் வர்த்தகவிடுமுறை தினங்களிலும் - கடைகள் திறந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதற்குச் சகல வர்தகர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நாட்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டுமெனவும் - யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

# 'நோராட்' திட்டத்தின் மூலம் வழுக்கியாறு குளம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

'நோராட்' திட்டத்தின்மூலம் வழுக்கியாறுப் பகுதியும், மாநகரப் பகுதியிலுள்ள குளங்களும் புனரமைக்கப்படவுள்ளன. இதற்கென 150 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புனர்வாழ்வு புனரமைப்பு மீள் குடியமர்த்துகை அமைச்சு மூலமாக, மேற்கொள்ளப்படவுள்ள இந்தத் திட்டங்களின்மூலம், குடாநாட்டில் நீர்வளப் பாதுகாப்பைப் பேணுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

குடாநாட்டின் நீர்வள, சூழல் பாதுகாப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஐந்து திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. வழுக்கியாறு - வடிநிலம், அதனுடன் தொடர்புடைய அராலி தடுப்பணையை திருத்தியமைத்தல்,

உப்பாறைத் திருத்தி, அரியாலையில் தடுப்பு ஒன்றை அமைத்தல் - யாழ்மாநகர பகுதிக்குட்பட்ட குளங்கள், வடிகால்களை திருத்தல் - ஆய்வு வேலைத்திறன்களை உயர்த்துவன்மூலம், உரியதிட்டங்களைத் தயாரித்தல் - நீர் வளத்தைப் பாதுகாப்பது ஆகிய ஐந்து விடயங்களே அவையாகும்.

இந்தத் திட்டங்கள் அனைத்தையும் மேற்கொள்வதற்குக் கிட்டத்தட்ட முன்னூறு மில்லியன் ரூபா நிதி தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், 'நோராட்' நூற்று ஐம்பது மில்லியன் ரூபா நிதியை வழங்குவதற்கே முன்வந்துள்ளது.

இதனால், முக்கியமான இருதிட்டங்கள் மட்டுமே தற்போது மேற்கொள்ளப்படவுள்ளன. ஏனைய திட்டங்களையும் விரைவில் மேற்கொள்வதற்குரிய ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வழுக்கியாறு புனரமைப்பு திட்டத்தின்கீழ், 9.5 மைல் நீளமான பருவகால ஆற்று வடிநிலத்தை சீர்செய்தல் - இந்தப் பகுதியிலுள்ள இருபதுக்கும் மேற்பட்ட குளங்களை புனரமைத்தல் - தடுப்பணைகள், உப வடிகால்கள் என்பவற்றை அமைத்தல் - கடல்நீர் உட்புகுந்து, நன்னீர் உவர் நீராவதைத் தடுத்தல் ஆகிய வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வழுக்கியாறு மூலமாக வருடந்தோறும் 3500 ஏக்கருக்கு மேற்பட்ட பயிர்செய் நிலங்கள் - நீரைப் பெற்று வருகின்றமையும், வழுக்கியாற்று மூலமாக 1750 ஏக்கர் சதுர அடி நீர் சேமிப்பப்படுகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# யாழ்.மின்சார சபைக்கு புதிய மின்மாற்றிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மின்சார சபைக்கு புதிய மின்மாற்றிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

சில தினங்களுக்கு முன்பு, யாழ்.மாவட்ட மின்சார சபைக்கு 10 இற்கும் மேற்பட்ட புதிய மின்பிறப்பாக்கிகள் அனுப்பிவைக்கப்பட்டள்ளன.

யாழ்.குடாநாட்டுப் பகுதிகளில் சில மின்மாற்றிகள் பாதிப்படைந்தும், பல மின்மாற்றிகள் செயல் இழந்தும் உள்ளன. இவற்றை மறுசீரமைப்பதற்காகவே இந்த மின்மாற்றிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள. இந்த மின்மாற்றிகள் தேவை ஏற்பட்ட இடங்களுக்குக் கொண்டுசென்று பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இதனால், ஓரளவு மின்விநியோகம் சீராக நடைபெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.



# கலாசரம்

## இலக்கியத்திற்கான நோபல் பரிசு

# கொயேட்சி நோபல் பரிசை ஏற்கும் வைபவத்தில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கவே விருப்பம்

மரபு வழியாக நடைபெறும் நோபல் பரிசை ஏற்கும் வைபவத்தில், கொயேட்சி கலந்துகொள்வார் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. இவர் பொதுவாக பிரமுகர் கூட்டத்தையும், பிரசித்திகளையும் விரும்புபவர் அல்ல.

'அநேகமாக நான் பரிசை சென்று வாங்கவே உத்தேசித்துள்ளேன்' என்கிறார் கொயேட்சி. அவர் ஒருபோதும் சுவீடன் சென்றவரல்ல. எனினும், அந்த நாட்டின் சமூக அமைப்பைத் தூரத்தில் நின்று பார்த்து, அதனால் கவரப்பட்டவர் என்பதால், வைபவத்துக்குச் செல்வார் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

'அவர் பொதுமக்களிடையே பழகக் கூச்சம்கொண்ட இயல்புடையவர். எனினும், 'ஸ்ரொக்கோமி'ற்கு வருவதாக உறுதியளித்துள்ளார்' எனப் புறம்போக் புத்தக வெளியீட்டாளர்கள் கூறுகின்றனர். இவர் நோபல் பரிசை வெல்லும் 6 ஆவது தென்னாபிரிக்கர். 63 வயதான கொயேட்சி - இலக்கியத்திற்கான இரண்டாவது நோபல் பரிசை தென்னாபிரிக்காவிற்குப் பெற்றுத்தந்துள்ளார். 12 வருடங்களுக்கு முன் திருமதி நடின் கோடிமர் இப்பரிசைப் பெற்றார்.

சுவிடிஸ் மன்னர் கால் XVI கௌஸ்ரவியிடமிருந்து பரிசைப்பெற வேண்டும் என்பதால், கொயேட்சி பரிசளிப்பில் கலந்துகொள்வது பற்றி ஐயப்பாடு உள்ளது.



பல சர்வதேச இலக்கியப் பரிசுகளைப்பெற்ற இவர் - பிரசித்திகளிலிருந்து ஒதுங்கி வாழ்பவ ரென்பதால், பெருமைமிக்க புக்கர்பரிசை இருமுறை பெற்றும், லண்டன் செல்லவில்லை.

நிறவேற்றுமை மிகுந்திருந்த தென்னாபிரிக்காவில் நடைபெற்ற சம்பவங்களால் கிடைக்கப் பெற்ற அனுபவங்களிலிருந்தே, அவரது ஆக்கங்கள் உருவாகின.

'மனிதனின் ஆன்மாவின் ஜீவதப் பொறியை அவர்களின் வீழ்ச்சி, இயலாமை இரண்டிலும் கண்டு எழுதியவர் கொயேட்சி' என்ற அடைமொழியுடன் பரிசை அளித்துள்ளார்கள் நோபல் பரிசு மன்றத்தினர். கொயேட்சி - செமிஸ்ரர்களில் சிக்காகோ பல்கலைக் கழகத்தில் விரைவுரை யாற்றுகிறார். 'பரிசு' தனக்கு முற்றிலும் எதிர்பார்க்காத ஒன்றே என்கிறார் வெற்றியீட்டாளர். இவர் 'காட்டுமிராண்டிக்காகக் காத்திருத்தல்' என்ற புகழ்பெற்ற நாவலை எழுதியவர்.

( நன்றி: சண்டேரைம்ஸ்)

## நூல் அகம்

### தெரிதல்



ஈழத்தில் அவ்வப்போது சில கலை இலக்கிய சஞ்சிகைகள் வெளிவருவதும், பின் அவை மறைந்து விடுவதும் எமது கலைஇலக்கிய உலகில் அடிக்கடி நிகழும் ஒரு சம்பவமாகும்.

இருந்தபோதிலும், இங்கு வெளிவரும் வாராந்த சஞ்சிகைகளில் வெளிவரும் ஆக்கங்களிலும்பார்க்க - கனதியாக, தாக்கமாகச் சிற்றிலக்கிய சஞ்சிகைகளில் ஆக்கங்கள் வெளிவருவதால், சிற்றிலக்கிய சஞ்சிகைகள் மறைந்துபோனாலும், அந்தப் பத்திரிகையின் கனதிபற்றி - பல ஆண்டுகளின் பின்பும் சிலாகித்து விமர்சனங்கள் வந்துகொண்டிருக்கின்றன.

இந்த வழியில் தற்பொழுது ஈழத்திலக்கிய உலகுக்கு 'தெரிதல்' என்ற புதிய சஞ்சிகை வெளிவந்துள்ளது. கலை இலக்கிய உலகில் ஆக்க இலக்கிய கர்த்தாவாகவும், விமர்சகனாகவும் நன்கு அறியப்பட்ட யேசுராசா தான் இந்தச் சஞ்சிகையின் ஆசிரியர். ஏற்கனவே 'அலை' என்ற இலக்கிய சஞ்சிகையை வெளியிட்டு, ஈழத்து இலக்கிய உலகுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பைச் செய்தவர் அவர். ஆனால், 'தெரிதல்' என்ற சஞ்சிகை 'அலை' சஞ்சிகைக்கு முற்றிலும் மாறுபட்டதொன்றாகவே வெளிவந்துள்ளது.

இதுபற்றி 'தெரிதல்' சஞ்சிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் யேசுராசா இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"வழமையான 'சிறுசஞ்சிகைப் பாணி'யிலிருந்து விலகி, சுருங்கிய அளவில், இலகுத் தன்மையுடன் விடயங்களைப் பகிர்ந்து பார்க்கும் ஒரு பரிசோதனை" என்று குறிப்பிடும் அவர் - சஞ்சிகை வெளியிடும் நோக்கத்தை அந்தத் தலையங்கத்தில் துலாம்பரமாக எடுத்துக்காட்டியுள்ளார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற சிங்கள - தமிழ் கலைக்கூடலில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் குறித்து, முன்பக்கத்தில் பிரதான செய்தியாக வெளியிடப்பட்டுள்ளது.

'வடக்கில் நாடகம நடத்தியபோதும், திரைப்படம் காட்டியபோதும் தமிழ்மக்கள் இடைஞ்சல் ஏற்படுத்தவில்லை' என்று சிங்கள -தமிழ் கலைக்கூடலில் தர்சிறி பண்டாரநாயக்க தெரிவித்த கருத்துக்களோடு, பேராசிரியர் சுசரிதத ஹம்லத், நாடகக் கலைஞர் பராக்கிரம நிரயல்ல, சுவாமிநாதன் விமல், அசோகா ஹந்தகம, ரோஹித பாஷண, லீன்ஸ் லோதிலக ஆகியோரின் கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன. அத்தோடு, பேராசிரியர் சி.சூரியகுமாரனின் 'கிளாலிக் கடவை' பற்றியும், குந்தவையின் சிறுகதை ஆக்கத்தில் சிங்களப் படங்களில் நடித்து பல பரிசுகள் பெற்ற தமிழ்ச சிறுமி நித்தியவாணி பற்றிய சிறிய தகவல்களும் இந்தச் சஞ்சிகைகளில் வெளியாகியுள்ளன.

அரச சாகித்தியவிழா பற்றிய கட்டுரையில் வழமையாக சாகித்திய விழாக்களில் இடம்பெறும் தில்லுமுல்லுகள் வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

'தகவற் களம்' என்ற பகுதி, இலக்கிய உலகில் அவ்வப்போது நிகழும் சம்பவங்களைத் தொகுத்துத் தரும் பகுதியாக உள்ளது.

புத்தக வாசல் வழி என்ற பகுதியில் ஏர்னஸ்ட் ஹெமிங்வேயினால் எழுதப்பட்ட 'கடலும் கிழவனும்' நாவல் பற்றிய அறிமுகம்- செம்பியன் செல்வனால் எழுதப்பட்டுள்ளது. தமிழகப் படைப்பாளி க.நா.சுப்பிரமணியத்தின் பிரபல வேற்றுமொழி நாவல்களின் மொழிபெயர்ப்பு நூலாக வெளிவந்தபோதிலும், அந்தப் புத்தகம் பரந்துபட்டரீதியில் வாசகர்களைச் சென்றடையாததும், குறிப்பாக ஈழத்திலக்கிய வாசகர்களுக்கு கிடைக்காததனாலும், இந்தப் புதிய பகுதிமூலம் பிறமொழி இலக்கியங்களை அறிமுகப்படுத்துவது சிறப்புக்குரியதாகும்.


இப்போது தமிழகப் பத்திரிகைகளிலும், சில ஈழத்து வெளியீடுகளிலும் 'க்ரைம்' எழுத்தாளர்களின் படைப்புக்கள் வெளிவருகின்றன. இந்தப் படைப்புக்களை வாசகர்கள் முண்டியடித்து, வாங்கிப் படிக்கும் பழக்கம் எம்மத்தியிலிருந்து இன்னும் அகற்றப்படவில்லை. இதனால், உண்மையாகச் சமூகநோக்கோடு, கனதியான படைப்புக்களைத் தாங்கி வெளிவரும் இலக்கிய ஏடுகள் விற்பனையில்லாது, இடையிலேயே கருகிப்போவதுண்டு. இவைகளைப் புட்டுக்காட்டும் நோக்கத்தோடு, இந்த ஜனரஞ்சகப் போலி எழுத்தாளர்கள் என்ற பகுதியில் - எழுத்தாளர் ரமணி சந்திரன் பற்றிய கருத்துக்கள் வெளிவந்துள்ளன.

ரமணி சந்திரன் இளநெஞ்சங்களுக்கிடையே மலரும் காதல் பற்றியே எழுதுவதாகவும், திரைப்படங்களின் பெயர்களை நாவலுக்கு இடுவதாகவும், வாசகர்களுக்கு பரிவு, கருணை, இரக்கம் தரும் வகையில் ஒரு பெண் பாத்திரத்தையும், ஈர்த்துவிடக்கூடிய ஆண் பாத்திரத்தையும் கொண்டு பொதுவாக அவரது கதைகள் பின்னப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடைசிப்பக்கத்தில் பகிர்வு என்ற பகுதியில் ஈழத்திலுள்ள ஜனரஞ்சக எழுத்தாளர்கள் என அவர் குறிப்பிடும் பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளார். ரஜனி, ஜி.நேசன், ராமேஷ், கே.எஸ்.ஆனந்தன், ந.பாலேஸ்வரி, மொழிவாணன், செங்கை ஆழியான் என்பவர்களின் பெயர்களே அந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

**மணிசேகரன்**

## அது போதும்!



(சென்றவாரத் தொடர்ச்சி....)

பசுமை நிறை என்னூரில்
உறுமறைப்பு உடையின் கொடியநிறம் தவிர
வேறில்லை
அழிந்த காப்பரண்களிலெல்லாம் – அவன்
அழித்த கற்பகதரு மரங்கள்
மண் அணைக்கப்பட்ட அணைகள்
புகமுடியாதபடி முட்கம்பிகள்
அனுமதி இன்றி உட்புகுந்தவர்
குறைந்த தண்டனை அனுபவிப்பர். – இன்னும்
மிதி வெடி, கண்ணிவெடி அபாயம்,
எச்சரிக்கை பலகைகள் – என்னூரில்
ஏன் இந்நிலை அடைந்தாய்
உன்துயர் – உயர்
பாதுகாப்பு வலயம்.

எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
காய்கறிகள் பறிக்க வேண்டும்
தோட்டக் கிணற்றில்
விழுந்து குளித்திட வேண்டும்.
பாட்டுப்பாடி பாலரெல்லாம்
சேர்ந்து வாழ்ந்திட வேண்டும்
இறந்தாலும் என்னூர்
சுடலையில் எரிய வேண்டும் – பேரன்
பிறந்தாலும் என்னூர்
வைத்திய சாலையில் பிறந்திட வேண்டும்.

உலக நாடுகளே உங்களிடம்
ஓர் விண்ணப்பம்
உதவி செய்யுங்கள் நாமெல்லாம்
ஊரில் வாழ்ந்திட,
உடைந்த வீடுகள்
கட்டித்தர வேண்டாம்
உணவுக்காக நிதியுதவ வேண்டாம்
டொலர் டொலராய்
பணம் வேண்டாம்
வேண்டுவதெல்லாம் ஒன்றேதான்
மகிழ்வோடு எங்கள் வீட்டில் வாழவிடுங்கள்
அதுபோதும்!

**மா.வி.சசிகரன்**

## பெண்ணம்மா நீ



**ஜனனத்தில் வெட்டப்பட்ட**
**தொப்புள்க் கொடியொடு - அவள்**
**சுதந்திரமும் வெட்டப்பட்டது...**
**துள்ளித்திரியும்போதே**
**'பெண்ணம்மா நீ'**
**என்றுரைத்த பேயர்கள்**
**வீரமதைக் கிள்ளியெறிந்தனர்.**
**வெட்டப்பட்ட சுதந்திரமும்**
**கிள்ளப்பட்ட வீரமும்**
**'குருதியில் கலந்தவளாய்'**
**வளர்ந்து வந்தாள்...**
**அவளச்ச மதை**
**ஆகாயத்தில் விட்டெறிந்தாள்**
**பாரதில் பெண்ணென்ற**
**பேதமை நீக்கிட**
**சாதனை பலநாட்டி**
**சரித்திரத்தில் நிற்கின்றாள்...**

**மண்ணையும் விண்ணையுந்தொட்டு**
**வெண்ணிலவின் வண்ணமதை**
**'தன்னிரு கன்னமதில் பூசிவரும்'**
**பெண்ணிவளாய்...**
**கம்பியூட்டர்க் கடலில்**
**மூழ்கித் தெடுத்துக் கரையேறும்**
**நீச்சல் வீராங்கனையாய்...**
**வானூர்தி ஓட்டிவரும்**
**வண்ண மயிலாய்...**
**'களத்தில்விழுப் புண்ணடைந்தும்'**
**'சுதந்திரச் சிறகிற்காய் - தன்'**
**கைகால்களைக் கொடுத்தும்**
**வீரம்பேசிக் கொண்டிருப்பவள்...**

**ரி.எஸ்.சிவா**

## கிழக்கும் மேற்கும்

அடுத்தவாரம் தொடரும்

# கலைந்துபோன கனவுகள்

இவ்வார சிறுகதை

கோ. கோகுலரதன்

என்ரை அண்ணனுக்கு அப்பிடி ஒண்டும் நடக்கக் கூடாது...'' இது அந்தப் பிஞ்சு இதயத்தின் பிரார்த்தனை. இதற்குள் எத்தனையோ சோகங்கள். சொந்தங்கள் எல்லாம் சொட்டும்படி பிரலாபித்த இதயம் ஒன்று ஓடத்துடிக்கிறது. ஓடமுடியாது களைத்தபோதும், இந்த நிலையில் இளைத்துக் களைத்துவருபவனை நோக்கி - வெள்ளைத் துணியால் மூடப்பட்ட ஸ்ரெச்சர் நகர்ந்தது. தனேசின் உள்ளம் மீண்டும் ஒருபடி இளகிக்கரைந்தது. 'அப்பிடி ஒண்டும்... என்ரை அண்ணனுக்கு... நடந்திருக்கக்கூடாது. ஆண்டவனே நீ தான் காக்கவேணும்...' என்று நினைக்கு முன்பே, அவனை நோக்கி வந்த ஸ்ரெச்சர், அவனை விட்டுச் சற்று விலகி 'ஐசி'யு றூமுக்குச் செல்வது அவனுக்குத் தெரிந்தது. ஓடிபபோன தனேஸ் அவசரத்தில் அண்ணன் பெயரையே கூறமுடியாது -

'அண்ணை - ஹைஏஸ் ஆக்சிடன்டிலை வந்த அந்த அண்ணனையோ இப்ப கொண்டு போனனீங்கள்'.

'அவரில்லை. இது வேற ஆள். அவருக்கு இனித்தான் ஒப்பிரேசன் நடக்கப்போகுது'. அருகே இருக்கும் தியேட்டர்கூட அவனுக்கு அதிக தூரமாய்ப்பட்டது. அதில் நின்ற காவலனிடம் - 'சேர்... அண்ணனுக்கு ஒப்பிரேசனாம். போகலாமோ?'. 'என்ன தம்பி உம்மடை கதை. அங்கை நீர் போகேலாது. பேசாமல் இரும். இப்ப கொஞ்சநேரத்தில் என்ன மாதிரி எண்டு தெரியும்தானே'.

'அது சரி, ஆர் தம்பி அந்த ஹைஏஸ் றைவரே' 'ஓமோம்... அவருக்கு இப்ப எப்பிடி' 'தம்பி அவருக்கு ஒரு பிரச்சினையும் இல்லை... நீர் கவலைப்படாதையும். நான் கண்டனான்தானே... நீர் கவலைப்படுகிற அளவுக்கு அவருக்குப் பிரச்சனை இல்லை'.

இது அவனின் சோகம் கண்டு, அவனிற்காய் கூறிய ஆறுதல் வார்த்தையே தவிர - நிச்சயம் அது உண்மை தான் என்றும் இல்லை. சிறுமையும், இளைமையும், காண்போரை வசீகரிக்கும் வெண்மை நிறமும், முகத்தில் ஒளியும், கூடவே சாந்தியும், வாய்திறக்கும் தோறும் காணுவோரை வேண்டுமென்றே கதைகேட்க வைக்கும் பற்களும் - இந்தக் காக்கி உடுப்பணிந்த காவல் தொழிலாளியையும் ஒருபடி அவன்மீது இரக்கப்பட வைத்தது.

'தம்பி உம்மை விடக்கூடாது எண்டில்லை, ஆனால் நீர் போய்ப் பிரயோசனம் இல்லை. அங்கை அடுத்த கதவுக்கால சின்ன டொக்டேஸ்மாரையே விடமாட்டினம். பேந்து நீர்....'.

ஆனால், தனேசுக்குத்தான் அந்த இருக்கையில் இருக்கவும் முடியவில்லை, நிற்கவும் முடியவில்லை. அவன் எதனை மறக்கவேண்டும் என்று நினைத்தானோ, அதுவே செக்குமாடுபோலச் சுற்றிச்சுற்றி வந்தது.

'சீ... எங்களுக்கு அப்பா இருந்திருந்தால் இந்த நிலை... எங்கடை அண்ணனுக்கு வந்திருக்குமே. அண்ணன் குடும்பத்தைக் காப்பாற்றவேண்டி எல்லோ... ' என எண்ணும் போது, அவன் இதயம் கருகி, ஏதோ ஒன்றில் ஒட்டிப்பறப்பதுபோல இருந்தது.

'இதைவிட, எங்களைப் படைச்ச ஆண்டவன் - எங்களை குடும்பத்தோட...' அவன் இதயம் எதையோ அவாவுவதுபோல் இருந்தது. 'எடை தம்பி என்ன யோசிக்கிறாய்! ஒண்டையும் எண்ணிக் கவலைப்படாதை. கவலைப்படுகிறது வாழ்க்கையில எதுக்கும் தீர்வாக அமையிறதில்லை'. இது முன்பின் பழக்கமே இல்லாத படிப்பறிவு முழுமை பெறாத அந்தக் காவலாளியின் தேறுதல் வார்த்தை.

'இந்தக் காவலாளியின் இரக்க சிந்தைகூட, எங்கடை அண்ணனைப் படிப்பிக்கிற பாவியளுக்குக் கிடையாதே. இல்லையென்டால், எங்கடை அண்ணனுக்கு இந்தக் கதி வந்திருக்குமே' என எண்ணும்போதே, அவன் கையில் வைத்திருந்த நமது ஈழநாடுப் பத்திரிகையில் பொல பொலவென கண்ணீர்த்துளிகள் விழுந்தன. இதை அந்தக் காவலாளி காணாமல் இருந்திருக்கமுடியாது. ஆனால், அதை உணரும் நிலைதான் தனேசுக்குக் கிடையாதே.

'தம்பி உங்கடை அண்ணன் கம்பஸ்சாம், முடிச்சிட்டாரோ...' என எண்ணத்தை மாற்றமுயன்றான் காவலாளி.

'எங்கடை அண்ணன் கம்பஸ்சை முடிச்சிருப்பார். ஆனால், முடிக்கேல்லை...' என்றவன் - மேலே எதையும் கூறமுடியாதபடி அவன் தொண்டை அடைத்துக் கொணடது. துன்பத்திலிருந்து அவனை மாற்ற எண்ணியவன் நிலை பரிதாபமானது. காவலாளியின் எண்ணம் கானல் நீராய்த் தெரிந்தது.

அவனுக்கு ஆறுதல்கூற ஆசைப்பட்டு, அவனை இருக்கையில் இருத்தி, கூடவே தானும் இருந்து, அவனது முதுகைத் தட்டி, கண்ணீரைத் துடைத்தபடி... என்னப்பு ஏன் உங்கட அண்ணன் கம்பஸ்சை முடிக்காமல் விட்டிட்டு ஹைஏஸ் ஓடினவர்''

என்ற கேள்வி மட்டும் அவனை மீண்டும் அண்ணனது மூன்றாம் வருடத்திற்குக் கூட்டிச்சென்றது.

'அம்மா! இனி ஒண்டும் செய்யேலாது... நான் 'ஹைஏஸ்' ஓடுறதை நிரந்தரமாக்கிறதைத் தவிர, வேறவழி இருக்கிறதா எனக்குத் தெரியேல்லை. இனி இவங்கள் சொல்லுற மாதிரிப் படிக்கிறதெண்டல், இன்னும் இரண்டு வரியம் எண்டாலும் செல்லும். அவள்வுக்கும் எங்கடை குடும்பத்தை ஆர் பாக்கிறது. தம்பி இந்த வருஷம் சோதினை எடுக்கப் போறன். அவனை எண்டாலும் பட்டதாரி ஆக்கிற பாதையைப் பார்ப்பம்...'


'அது சரி வேந்தன், எதுக்கும் நீ அவசரப்பட்டு முடிவெடுக்க...' இழுத்தாள் இளவேந்தனின் தாய் சுமதி. அவளால் இழுப்பதைத்தவிர, வேறு என்னதான் செய்யமுடியும். கம்பஸ் செலவெண்டால் கொஞ்சமே. போதாதுக்கு அடுத்தவன் பயோ படிக்கிறதெண்டால் எவ்வளவு? உடுப்பு, உணவு, போக்குவரத்து, றூம் வாடகை, பென்சில், பேனா, புத்தகம் பாக்கப்பேனால் இரண்டு அப்பன்மார் உழைச்சுமே கட்டாது. அவளால் எப்படி முடியும்.

நீ உங்கடை லெக்சேஸ்மாரட்டை எண்டாலும் மேலு இருக்கிற கெட், டீன், வீசிமாரோட எண்டாலும் கதைச்சுப் பாரனப்பு...'.

இளவேந்தனுக்கு இதயம் தணல் கொண்டு வாட்டுவது போல் இருந்தது. 'எங்கடை லெக்சேஸ் இதை எல்லாம் எங்கை கேக்கப்போறாங்கள். அவங்கள் தாங்கள் பிடிச்ச முயலுக்கு மூண்டு கால் என்பாங்களே...'. 'இளவேந்தன்! இந்த ஊத்தைகுப்பையனைப்போல இல்லை நான். சோ, நீர் ஆரட்டையும் என்னை இப்பிடிச் சொல்லிப்போட்டதெண்டு, சொல்லுகில் சொல்லும். 80% வரவு இல்லாத ஸ்ருடன்சுக்கு என்னால சைன் பண்ணேலாது. நீர் உந்தக் கள்ள மெடிக்கலுக்குச் சையின் பண்ணிற ஆக்களோட போய்க் கதையும்'. வருத்தமும், வறுமையும் ஒருங்கே வாட்டிவிட்ட மாணவனுக்கு... விரிவுரையாளரின் பதில் அது.

'சேர்.. நான் ...' 'ஐசே, நீர் என்னோட கதையாதையும் . வெரி சொறி உம்மடை கதையை அக்சப்பண்ணுற ஆக்களோட கதையும்'. 'சேர்..., நீங்கள்... என்ரை நிலையில் இருந்தால்...'

உம்மை மாதிரி ஆடிக்கும், அமாவாசைக்கும் லெச்சருக்கு



வந்திட்டு, எக்சாம் எழுதப்போறன் எண்டு நான் விதண்டாவாதம் பண்ணமாட்டன். நான் உம்மடைநிலையில் இருந்திருந்தா, ஒழுங்கா வந்திருப்பன். நீர் வெளியில போம். என்னை வீணா இன்சல் பண்ணாதையும்...

யுத்தம் மட்டும் யாழ்.மாணவர்களை விசரர், அறிவிலிகள், ரவுடிகள் ஆக்கவில்லை. மாறாக அவர்களது சில கசப்பான அனுபவங்களும் துணையாய் அமைகின்றது. 'படிப்பு, பட்டப் படிப்பு, பட்டறிவோ, ஒரு மாணவனின் அகத்துணர்வோ, அவனின் உள்வியற் சிக்கலோ, அவனைப் பற்றிய புரிந்துணர்வோ இல்லாத உவங்களட்டைப் படிக்கிறதைவிட, கூலி வேலை செய்து...' அவன் மனம் அர்த்தமற்ற மனிதர்களின் பெயரால் விரிசலடையத் தொடங்கியது.

'சீ... இதைவிட.... ஆனாலும் ஒருக்கால் எங்கடை கெட்டிட்டைத் திரும்பவும் போய்ப் பார்ப்பம்....

'ஆ... தம்பி நீங்கள் 'ராமா அண்ட் தியேட்டர்' எல்லோ...

ஓம் சேர்...' 'என்ன விஷயம் தம்பி...' 'சேர்! எங்கடை பாட சேர் சைன் பண்ணமாட்டாராம்'. "நான் வைச்சுத் தந்திட்டனே...' 'நீங்கள் காரணத்தைப் பாத்திட்டு, சைன் வைச்சுத் தந்த பிறகும் சேர் வைக்கமாட்டாராம். அதால மிஸ்சும்...'

'அப்ப நான் என்ன செய்யிறது' அப்ப... எதுக்கும் நீர் எங்கடை டீனோடை கதைச்சப்பாரும். ஆனா... இந்தமுறை உங்கட லெக்சரஸ்மார் சைன் பண்ணாட்டி, எக்சாம் எடுக்கேலாது. கெட் சைன் பண்ணீட்டார் எண்டு காட்டினீரோ சேருக்கு'.

'ஓம் சேர். ஆனா, அதை அவர் பார்க்கவேமாட்டாராம்...'

'நான் என்னப்பு செய்யிறது. அவர் சைன் பண்ணாட்டி நீர் தேட் இயர் செக்கண் செமிஸ்ரர் எடுக்கேலாது. அப்பிடி எண்டால், வாற வரிசம்தான். எதுக்கும் நான் போட்டிலை உமக்காகக் கதைச்சுப்பாக்கிறன்... ஆனா... நீர் எச்சாம் எடுக்கிறதைக் கென்போம் பண்ணமாட்டன்'.

நல்ல பேராசிரியர் - இவர்போல இரண்டு மூன்று பேராசிரியர்கள் வாழுவதால்தான், இந்த வையகம் வாழ்கிறது. இதற்குள் பாவிகளும் - இவர்கள் பெயர்களை இடைசுகம் சொல்லி வாழ்கிறார்கள்.

'என்னம்மா உங்கடை கதை. நான் ஏதோ ஒண்டும் செய்யாமல் பேசாமல் பாத்துக்கொண்டிருக்கிறமாதிரி. இப்ப போட்டில பேர் வந்திட்டுது. இந்தமுறை எக்சாம் எடுக்கேலாத ஆக்களின்ரை ...'

'அது சரி அப்பு! அப்ப இவ்வளவு நாளும் செலவழிச்ச காசு வீண்...'. 'அம்மா, படிக்கத்தானே செலவழிச்சது. எங்களுக்கு அளவு இவ்வளவுதான்...'.

"என்ரைகடவுளே, படிப்பை இடையில விடுறதெண்டால்...' தாயின் மனம் இறப்பிற்கும், வாழ்விற்கும் இடையே ஊசலாடியது. '... என்னம்மா இடையில விடாமல் என்ன செய்யிறது. சிகரத்தைத் தொடுவன் எண்ட நினைப்பில சிகரம் ஏறினம். இடைநடுவில் வரப்பிடிக்கிற பாறைகள் உடையத் தொடங்கீட்டுது இனி என்ன செய்யிறது. மலையாள நாம் விழுவதைத் தடுக்கில், ஆராவது மேல இருக்கிற ஆக்கள் கயிறுபோட வேண்டும். இல்லையெண்டால், ஓரளவாவது குதிச்சு, மற்றாக்களுக்கு கயிறு எறிஞ்சு இரண்டு பேரையாவது மேல ஏத்த வேண்டும்.

'அட தம்பி, நீ குதிச்சா... பேந்தெப்படி ஏறுறது...'.

'ஏறுவதற்கு ஒரு காலம் வரும்தானே. அதுவரை கீழே தானே நிக்கவேண்டும். இல்லையென்றால், எங்களுக்கு அப்பன்னாச்சி, அண்ணன், அக்கா ஆரும் மேலயாவது இருக்கினமே - கயிறாவது எறியிறதுக்கு'.

'என்னப்பு செய்யிறது உன்ரையப்பா அண்டைக்கு அந்த விசயத்தை அம்பலப்படுத்தியிருக்காவிட்டால், அவர் இண்டைக்கும் பத்திரிகையாளனாய் இருந்திருக்கலாமே...'.

'என்னம்மா! உங்கடை கதை. அப்பா தன்ரை கடமையைச் செய்தார். அது எங்கடை சிலபேற்றை அந்தரங்கத்தை அம்பலப்படுத்திப்போட்டுது. அதுக்கு அவர் என்ன செய்யிறது'.

'அது தானே அப்பு! அவருக்க எமனாய்ப்போச்சுது...' 'என்னசெய்யிறதம்மா. இந்த நாட்டிலை ஜனநாயகசூழல், நீரோட்டம் என்று சொல்லிக்கொண்டு, அராஜகம் பண்ணும் ஆட்கள்கூட்டம் இருக்கிறவரையும், அப்பா மாதிரி பத்திரிகையாளர்களின் வாழ்க்கை கேள்விக்குறிதான். அம்மா பழசைப் பிரட்டி என்ன பிரயோசனம். நடந்தது நடந்தது தான். இனி நடக்கப்போறதையாவது பாப்பம்'.

'அப்ப என்னப்பு உன்ரை முடிவு...'

'நான் மலையாள குதிச்சாவது தம்பியையும், உங்களையும் இடையில இருந்து விழுவதைத் தடுக்கிறது தான். அதுக்காக இரவில ஹைஏஸை இவ்வளவு நாளா ஒழிச்சு ஒழிச்சு ஓடின ஹைஏஸை - நிரந்தரமாக ஓடுவதாய் எங்கடை மோகன் கொமினிக்கேசன் அண்ணையிட்டச் சொல்லிப்போட்டன். அவரும் ஓம் எண்டுவிட்டார். நான் இனித் தம்பியை எண்டாலும் டொக்டராகுவன் என்ற நம்பிக்கை எனக்கும், என்ர தம்பிக்கும் இருக்கும். என்றாலும் அவனுடைய மனம் மட்டும் ஓர் ஆத்மதிருப்தி கண்டது.

'இளவேந்தன்... ஏழாலை!' இவற்றை சொந்தக்காரர் ஆரும் நிக்கிறியளோ...' இது வைத்திய கலாநிதியின் அழைப்பாணை. அவ் அழைப்பாணை தனேசை திடீரென ஸ்தலத்திற்குக் கொண்டுவந்தது.

'நா... நான் வந்திருக்கிறேன். என்ன நடந்தது என்ரை அண்ணுக்கு...' என்ற பதறியபடி பதிலளித்தான் தனேஸ்.

'பெரிய ஆக்கள் ஒருவரும் வரேல்லையோ...'

இல்லை.. டொக்டர். நான்தான் அவற்றை தம்பி வந்திருக்கிறன். அண்ணன் எப்பிடி இருக்கிறார்'. சின்னக் குழந்தைபோல மிகவும் சஞ்சலப்பட்டு பதில் கூறினான் தனேஸ்.

'பார்க்கலாமோ டொக்டர் என்ரை... என்ரை... அண்ணனை. வைத்திய கலாநிதியின் மனம் ஒருபடி உடைந்தது. கண்கள் பனித்தன. லேஞ்சியால் ஏதோ தூசுவிழுந்து விட்டதுபோலப் பாசாங்கு செய்த அவர் - கண்களைத் துடைத்தபடி, 'தம்பி பிரச்சனை பெரிசாய் இல்லை, உங்கடை அண்ணன் சுகமாய் இருக்கிறார். அப்பா வருவாரோ இப்ப...! 'ஏன் டொக்டர் அப்பா...' சைன் பண்ண வேணும். உங்கடை அண்ணனுக்குச் சின்ன 'ஒப்பிரேசன்'

'அப்பா இல்லை. ஏன் நான் சைன் பண்ணுறன் டொக்டர்'. 'பதினெட்டு வயதுக்கு மேல ஆகவேணும் அப்பு' 'எனக்குப் பதினெட்டு வயதுக்கு மேலை டொக்டர்'

'நீர் என்ன செய்யிறீர்' 'A/L எடுத்திட்டன்' 'அப்ப இதிலை சைன் பண்ணும். நான் இந்த ஒப்பிரேசனை ஏற்றுக்கொள்ளுறன் எண்டு...' '...பெரிய ஒப்பிரேசனோ டொக்டர்?' 'அவருக்கு அவ்வளவு பெரிய ஒப்பிரேசன் எண்டில்லை. ஆனால், நெஞ்சில செய்யவேணும். அதாலை...' 'நான் பாக்கலாமோ டொக்டர்...'

'பாக்கேலாதப்பு. அவருக்கு பிளட் ஏத்திறம். வால்பு ஒண்டிலை பிரச்சினை இருக்கு. அது சரி அப்பு, அப்பா இல்லையெண்டால் அம்மா...'

'அம்மாக்குத் தெரியாது டொக்டர்...''அப்ப சரி. நீர் அம்மாவைக் கூட்டிக்கொண்டு வாருமன் எதுக்கும். இந்த அக்சிடண்ட் - வாகனம் கட்டுப்பாட்டை இழந்து சென்றதால தான் உங்கடை அண்ணனுக்கு ஸ்ரேறிங் பலமா நெஞ்சில அடிச்சிட்டுது'' 'சரி டொக்டர். நான் அம்மாவோட வாறன்'. உணர்ச்சி மோதல் உந்தித்தள்ள, உள்ளத்தின் வெளிப்பாட்டால், உற்சாகத்தோடு, தனது மகனுக்கான சமையலை ஆனந்தத்துடன் சமைத்துக்கொண்டிருந்தாள். சுமதி. 'அம்மா... அம்மா... என்ன செய்யிறியள் அம்மா...'

'என்னப்பு... என்ன? நான் அண்ணா வரப்போறான் எண்டு சமைக்கிறன். ஓர் ஆனந்தமான முடிவு தெரியுமோ தனேஸ்'. 'ஓ. அது தெரியும்தானே. எனக்குப் பயோவில் ஓல் சிலோனில பெஸ்ற் கிடைச்சிருக்கு...'

நான் அதில்லை அப்பு அறிஞ்சது'. 'அப்ப எது? உன்ரை அண்ணனை எக்சாம் எடுக்க வரட்டாம். உதவிக் கலைப் பீடாதிபதி லெற்றர் போட்டிருக்கிறார். எக்சாம் எடுத்திட்டு படிப்பைத் தொடரட்டாம்

'அது சரி நீ என்னனண்டு றிசல்ட் அறிஞ்சனி...' பேப்பரில வந்திருக்கு அது சரி கெதியாய் வெளிக்கிடுங்கோ.

என்னடா தம்பி உன்ரை கோலம் என்ன நடந்தது எனன... ஏன்... சந்தோமா இருக்கிறதுக்கு, சோகமா நிக்கிறாய் ஏன் இப்பிடி அவசரப்படுகிறார்.

'அம்மா அண்ணன் ஆக்சிடன்ட் பட்டு வாட்டிலை...' என்ரை ஐயோ! என்ரை பிள்ளைக்கு என்ன நடந்தது என்ரை ஐயோ என்ரை வேந்தனுக்கு என்ன நடந்தது. ஆனந்தப் பெருமூச்சு அடிக்கிடையில் ஆழந்த சோகமாய் மாறியது. ஏன்ரா இதை நீ வந்தவுடனை சொல்லி இருக்கலாமெல்லோ..''

'சரி வாங்கே கெதியிலே அது சின்ன ஆக்சிடன்தான்' ஆனால், ஏதோ ஒரு பெரிய உண்மையை மூடி மறைப்பதாய் அவன் உள்ளம் கூறிற்கு. தம்பி.. தம்.. பி.. என்ரைர.. தம்.. பி.. உன்.. ரை.. றிசல்... ட் என்..ன. ஐரோ அ..ம்..மா '' இந்த முனகல் மட்டுமல்ல, இரத்தம் பாய்சலில் ஏற்பட்ட குறைவு, சிவப்பு மின்குமிழின் பிரகாசம், சேலையின் ஏற்றுவதில் தடங்கல் - இவை வைத்தியர்களைத் தடம்புரள வைத்தன. இளவேந்தன் - அது அவனது காரணப் பெயர் என்றே எண்ணவைத்தது.

இளவேந்தன் சொந்தக்காரர் ஆரும் நிக்கிறியளோ வைத்திய கலாநிதி ஓரிருவரின் உரத்த தொனி அது. அவரின் அழைப்பாணை கேட்கவும் - தனேசும், தாயும் வந்து சேரவும் சரியாக இருந்தது.

ஆ... தம்பி.. இது அம்மாவோ... இரண்டு பேரும் வாங்கோ உள்ளை...'என்னை உள்ளுக்குப் போகேலாது எண்டவர் எல்லோ.. ஏன் இப்ப வரட்டாம்....'

'அண்ணனுக்கு.. அவனால் அதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை'. 'அப்படி ஒண்டும் ஆகக்கூடாது' என மனம் பல தடவைகள் எண்ணிக்கொண்டாலும், அடி எடுத்து வைக்க கால்கள் தயக்கம் காட்டின.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com


**சிந்தனைக்கு**

*வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### சமாதான முயற்சியை நிராகரிக்கும் ஆயுதக்கொள்வனவு முயற்சிகள்!

கடந்த மாதம் சிறிலங்காவின் நிதியமைச்சர் கே.என். சொக்ஸியினால் சமர்ப்பிக்கப்பட்ட அடுத்த ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு செலவினங்களுக்காக ஐயாயிரத்து எண்ணூற்றிரண்டு கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டமை அறிந்த விடயமே.

போர்நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டு, புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் சமாதானச் சூழலானது கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக சர்வதேச போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மேற்பார்வையின்கீழ் தொடர்ந்து நிலவிவரும் நிலையில், யுத்தகாலத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் அதிகளவு தொகையை மீண்டும் பாதுகாப்புச் செலவினங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டமையானது, அர்த்தமற்றதும் சந்தேகத்திற்குரியதுமான ஒன்றாகவே நோக்கப்பட்டது.

நாட்டில் பொருளாதார வளர்ச்சி என்பது போர் நடந்து கொண்டிருந்த காலப்பகுதியில் படுமோசமான வீழ்ச்சியை அடைந்திருந்ததுடன், நாட்டின் சகல வளங்களையும், பலங்களையும் அரசு அதற்கே பயன்டுத்தவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டிருந்தது.

வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் பாதுகாப்பு செலவீனங்களுக்கான நிதியானது போதாமை காரணமாக மேலதிகமாக இடைக்கால நிதிஒதுக்கீடுகளையும் மேற்கொள்ளவேண்டிய அவசியமும் ஏற்பட்டது.

அப்போதும் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் ஜனாதிபதி சந்திரிகாவேதான். அவரே அப்போதைய நிதியமைச்சராகவும் இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. போர் உக்கிரம் கொண்டிருந்த காலத்தில் அரச படைகளுக்கு தோல்விகளும், இழப்புகளும், பின்னடைவுகளும் ஏற்பட்டவேளைகளில், உண்டான ஆயுத ஆளணி இழப்புகளை ஈடுசெய்ய, மேலும் மேலும் நிதியை ஒதுக்கீடு செய்யவேண்டிய தவிர்க்கமுடியாத நெருக்கடிக்குள் அரசு சிக்கித்தவித்தது.

கடன்பட்டு யுத்தத்தை முன்னெடுப்பதில் முனைப்புக்காட்டிய பொ.ஐ.முன்னணி அரசு போரில் கிடைத்த பெருந்தோல்வியும், பாரிய இழப்புகளும் சிறிலங்காவை, அதன் வளர்ச்சியின் சகல பரிமாணங்களிலும் அதல பாதாளத்திற்குள் தள்ளியது.

கடந்த பொதுத்தேர்தலின்போது - யுத்தத்தால் சலிப்புற்றிருந்த தென்பகுதி மக்கள் மத்தியில் சமாதானத்தை வலியுறுத்திய ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியானது செல்வாக்கைச் செலுத்தியமை வியப்பிற்குரிய ஒன்றல்ல.

யுத்தத்திற்கு செலவிடப்படும் பெருந்தொகை நிதியை சமாதானத்தை ஏற்படுத்துவதன்மூலம், நாட்டின் அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்கும் பயன்படுத்தமுடியும் என ரணில் விக்கிரமசிங்க கூறியதை தென்பகுதி மக்கள் நம்பியே, ஐ.தே. கட்சிக் கூட்டணிக்கு கடந்த பொதுத்தேர்தலில் வாக்களித்து ஆட்சிபீடம் ஏற்றினர்.

தேர்தலுக்கு முன்பே விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்திருந்த போர்நிறுத்தத்தை இறுகப் பற்றிய ஐக்கிய தேசிய முன்னணி அரசு சமாதான பேச்சுவார்த்தைக்கான முன்னெடுப்புக்களை சர்வதேச சமூகத்தின் ஆதரவுப்

பின்னணியுடன் தொடங்கிய போது, சிறிலங்காவின் பொருளாதாரமும் மந்த நிலையில் இருந்து மீளத் தொடங்கியது.

ஆனால், கடந்த ஒன்றரையாண்டு கால சமாதான சூழலை சீர்குலைப்பதில் ஜனாதிபதியும் அவரது துணைக் கட்சிகளும் தொடர்ந்து காட்டிய அதீத அக்கறையானது. சமாதான முயற்சிகளை இன்றுள்ள சந்தேகத்திற்குரிய நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. ஜனாதிபதி அண்மைக் காலத் தனது அதிரடி நடவடிக்கைமூலம் - பாதுகாப்பு அமைச்சை தன் வசமாக்கிக் கொண்டதன்மூலம், சமாதானத்திற்கெதிரான தனது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்திவிட்டார்.

சமாதானத்தை யுத்தமூலம் ஏற்படுத்தலாம் என்ற யதார்த்தத்திற்கு முரணான கோட்பாட்டில் மூர்க்கத்தனமான நம்பிக்கையைக் கொண்டிருந்தவரான ஜனாதிபதி சந்திரிகாவின் தற்போதைய நிலையும் போரிற்கப்பாற்பட்டதேயாகும். எனினும், சமாதானத்தை வலியுறுத்தும் சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களின் காரணமாக, யுத்தத்தை மீண்டும் உடனடியாகத் தொடங்கமுடியாத குமுறலுடன்கூடிய மனத்தைக் கொண்டவராகவே அவர் உள்ளார். ஆயினும், முப்படை மற்றும் பொலிஸ்படையின் கட்டுப்பாட்டை முழுமையாகத் தன் வசம் எடுத்துக் கொண்ட அவர் யுத்தத்தை ஆரம்பிக்காவிட்டாலும்கூட, அதனை ஆரம்பிக்க வேண்டியதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்துவிட்டார் என்றே கருத வேண்டிய நிலையில் சம்பவங்கள் நடந்து வருகின்றன.


ஐ.தே.முன்னணி அரசின் அமைச்சர் சொக்ஸி பாதுகாப்பு செலவுக்கென ஒதுக்கிய பெருந்தொகையை போன அரசு கொள்வனவு செய்த பாதுகாப்பு படைக்கான ஆயுத தளபாட உபகரணங்களுக்கான கடனை செலுத்தவே ஒதுக்கீடு செய்யப்பட்டதாகக் கூறியிருந்தார்.

ஆனால், தற்போது புதிய இராணுவ தளபாடக் கொள்வனவுக்காக - முப்படைகளையும் சேர்ந்த அதிகாரிகள் குழுவொன்று, மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் தலைமையில் சீனா சென்று நவீன ஆயுதங்கள், கடற்படைப் படகுகள், போர்விமானங்கள், ஆகியவற்றை பெருமளவில் கொள்வனவு செய்யத் திட்டமிட்டுள்ளதாக தெரியவந்துள் ளது.

இது - சிறிலங்காவின் பேரினவாத அதிகாரவர்க்கத்தின் போர்வெறி இன்னமும் தணியவில்லை என்பதையும், சமாதானத்தில் அவர்களுக்கு நம்பிக்கையோ, ஆர்வமோ இல்லையென்பதையுமே வெளிப்படுத்துவதாக உள்ளது.

## நாடும் நடப்பும்

*செய்தி* : இசற் புள்ளியினால் தமிழ் மாணவர்கள் பாதிப்பு




# குடாநாட்டு அபிவிருத்தி திட்ட அறிக்கைகள் தமிழ்மொழியில் தயாரிக்கப்படவேண்டும்!

## புனர்வாழ்வு அமைச்சின் மேலதிக செயலாளர் சண்முகலிங்கம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டை மையமாக வைத்து மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து தயாரிக்கப்படும் அறிக்கைகள் தமிழ்மொழியிலேயே தயாரிக்கப்படவேண்டும். இதன்மூலமே அந்தத்திட்டங்கள் வெற்றியடையும்.

இவ்வாறு, புனர்வாழ்வு புனரமைப்பு மீள்குடியேற்ற அமைச்சின் மேலதிக செயலாளர் க.சண்முகலிங்கம் தெரிவித்தார்.

நோராட் நிறுவனம் மூலமாக குடாநாட்டில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலொன்று, நேற்று முன்தினம் பஸ்தியான் ஹோட்டலில் நடைபெற்றது. இதற்கு தலைமை தாங்கி உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகை யில்,

பொதுவாக அரசு மூலமாக மேற்கொள்ளப்படும் திட்டங்கள் தொடர்பான தெளிவு, உத்தியோகத்தர்கள் மத்தியிலும் இல்லை. இதன்மூலமாக மக்கள் மத்தியில் தவறான கருத்துக்கள் உருவாகியுள்ளன. இவற்றைத்தவிர்க்க வேண்டுமாக இருந்தால், மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும்.

மாணவர் சமுதாயத்தினூடாக பொதுமக்கள் மத்தியில் கருத்துக்கள் எடுத்துச்செல்லப்படவேண்டும். இதற்கு ஆய்வுகள் தொடர்பான விடயங்கள் அனைத்தும் தமிழிலேயே எழுதப்படவேண்டும். தற்போது தமிழில் எழுதப்பட்டுள்ள ஆய்வுக் கருத்துக்கள்கூட பலருக்கு தெரியாமலுள்ளது.

இதற்காக ஆய்வுக் கட்டுரைகள் அனைத்தையும் தமிழிலேயே அச்சுப்பதித்து நூல் வடிவமாக வெளியிடும் நடவடிக்கைகளை எடுத்துவருகின்றோம். மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும்.

தெருவெளி நாடகங்கள், கருத்தரங்குகள் ஊடாக- சூழல் முகாமைத்துவம் பற்றிய அறிவினை மக்களுக்கு எடுத்துச் சொல்லப்படவேண்டும். இவற்றின் ஒரு படியாக, பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டிகளையும் நடத்தவுள்ளோம்.

ஆய்வுக்கட்டுரைகளை பணம் கொடுத்து வாங்கி அவற்றை யாழ்.பல்கலைக்கழகம், யாழ்.பொதுசன நூலகம் என்பவற்றுக்கு அன்பளிப்புச்செய்ய எமது அமைச்சு ஒரு தொகை நிதியை ஒதுக்கத் தயாராகவுள்ளது.

எமது மக்கள் மத்தியில், இன்று நூலகம் பற்றிய தெளிவான ஒரு நிலைப்பாடு இல்லை. இதனால் பல பின்னடைவுகளை எமது சமூகம் எதிர்நோக்கவேண்டியுள்ளது. எமக்கு வேண்டிய திட்டங்களை நாமே தயாரிக்கவேண்டும். வெளிநாடுகள் அவற்றைத் தயாரிப்பது என்பது முடியாத காரியமாகவே நான் உணர்கிறேன்.

பாடநூல்கள்கூட இன்னொருவர் தயாரித்ததையே மொழிபெயர்த்து நாம் கற்றுக்கொண்டிருக்கிறோம். எமது தேவைக்கேற்ற கல்விக்கான நூல்களை நாமே எழுதவேண்டும்.

எமது பாரம்பரியத்தையும், கலாசாரத்தையும் பிரதிபலிப்பதாகவே கல்வி நெறிமுறைகள் அமையவேண்டும். எமது மக்களின் தேவைகளையும், வரலாற்றையும், கலாசாரத்தையும் பிரதிபலிக்கும் துண்டுப்பிரசுரங்களையாவது வெளியிடவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

## மாகாண சபைகளுக்கான தேர்தலுக்குத் தயாராகுமாறு ஜனாதிபதி சந்திரிகா உத்தரவு

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கான தேர்தலுக்குத் தயாராகுமாறு, சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களை - ஜனாதிபதியும், கட்சியின் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உத்தரவிட்டுள்ளார்.

மாகாணசபைத் தேர்தல் மற்றும் இன்றைய அரசியல் நிலை குறித்து - சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களுடன் ஜனாதிபதி நேற்றுமுன்தினம் மாலை நடத்திய ஆலோசனையின் போதே, இந்த உத்தரவை விடுத்துள்ளார்.

இந்தச் சந்திப்பில், சுதந்திரக் கட்சி- ஜே.வி.பி.யுடன் செய்து கொள்ளப்போகும் கூட்டு முன்னணி குறித்து பல அமைப்பாளர்கள் - ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய நல்லிணக்கமொன்றை ஏற்படுத்திக்கொள்ள பிரதமருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்து இக்கூட்டத்தில் விளக்கமளித்த ஜனாதிபதி, தனது பரிந்துரைகளைப் பிரதமர் நிராகரித்து விட்டதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், இந்தச் சந்திப்பில், மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள, மாவட்டரீதியான குழுக்களும் நியமிக்கப்பட்டன.

## அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகாணுமாறு சர்வதேச நாடுகள் இலங்கைக்கு வலியுறுத்து!

(கொழும்பு)

தென்னிலங்கையின் அரசியல் நெருக்கடி சுமுகமானமுறையில் தீர்த்துக் கொள்ளப்படவேண்டியதன் அவசியம் குறித்து, சர்வதேச நாடுகள் - ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் தொடர்ச்சியான அழுத்தங்களைக் கொடுத்துவருவதாகத் தெரியவருகிறது.

கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் நிருபம் சென்- கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி மற்றும் பிரதமரைத் தனித்தனியாகச் சந்தித்து, இலங்கை அரசியல் நிலைவரம் சம்பந்தமான இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துக் கூறியிருப்பதுடன், இது தொடர்பில் பரஸ்பர சுமுக முடிவு எட்டப்படவேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

இதேபோல், கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவர் ஹான்ஸ பிரட்ஸ்கர் - முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்து, இலங்கை அரசியல் நிலைவரம் சம்பந்தமான நோர்வேயின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

## மருதங்கேணியில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் விநியோகம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பகுதிகளில், மீளக்குடியமர்ந்த மக்களுக்கு யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தினால் உலர் உணவு அல்லாத பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக மீளக்குடியமர்ந்த மக்களுக்கு பாய், வாளி, வீட்டுப்பொருட்கள் போன்றன வழங்கப்பட்டன.

அதற்குப்பின்னர் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு எதிர்வரும 16 ஆம், 17 ஆம், 18 ஆம் திகதிகளில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஒன்பது கிராம அலுவலர் பிரிவுகளுக்கு வழங்கப்படவுள்ளன.

16 ஆம் திகதி வெற்றிலைக்கேணி, போக்கறுப்பு, முள்ளி வளை பகுதிகளுக்கும் - 18 ஆம் திகதி செம்பியன்பற்று வடக்கு, தெற்கு, மருதங்கேணி, வத்திராயன் பகுதிகளுக்கும் வழங்கப்பட்வுள்ளன. (17)

# விளாடிமிர் புட்டினின் தேர்தல் வெற்றியும் ரஷ்ய மக்களின் அரசியல் எதிர்பார்க்கையும்



புட்டின்



உலகத்தின் இருதய நிலமெனப் பேசப்படும் ரஷ்யாவின் அரசியல் பொருளாதாரப் போக்குகளும், இர்ாணுவரீதியான நடவடிக்கைகளும் அநாகரிகமான மாறுதல்களை அண்மைக்காலத்தில் ஏற்படுத்திவருகின்றது. ஒரு வரலாற்றுத் திருப்பத்தையும், புரட்சிகளுக்கான அத்திவாரத்தையும், உலகம் எல்லாவற்றுக்குமான முன்னுதாரணமாகவும் அமைந்திருந்த நிலைமாறி, தேசத்தைக் காட்டிக் கொடுககும் அரசியல் எழுச்சியையும், போலிகளை உண்மைகளெனப் பேசும் தலைமைகள் எப்போது ரஷ்யாவின் ஆட்சியாளர்களாகத தோன்றினார்களோ, அன்றே அநாகரிகமான அரசியல் தோற்றமும் விழித்துக்கொண்டது. இந்த வரிசையில் மிகமோசமான அரசியல் தலைவராக முன்னாள் ஜனாதிபதி ஜெல்சின் காணப்பட்டார். கம்யூனிஸ்ட்டுகள் ஆட்சியிலும், அத்தகைய அரசியல் சித்தாந்தத்திலும் அநாகரிக அரசியல் முற்றாகக் களையப்பட்ட தொன்றல்ல. உடைந்தபின்பும் அநாகரிக அரசியல் ரஷ்ய மக்களுக்குப் பாரிய நெருக்கடிகளை உருவாக்கியதாகவே அமைந்திருக்கின்றது. இந்த வாரம் ரஷ்யாவில் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்களை அவதானிப்போம்.

ரஷ்யாவின் வலுவான சபையாக விளங்கும் டுமாவுக்கான தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் ஆட்சி 2/3 பெரும்பான்மையைப் பெற்று, அமோக வெற்றியைப் பெற்றது. இது புட்டினின் தனிப்பட்ட அரசியல் செல்வாக்கு என்றும், புட்டினின்

கே.ரீ.கணேசலிங்கம்

அரசியலில் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளுக்கு கிடைத்த வெற்றி என்றும் ரஷ்ய அரசியல் விமர்சகர்கள் புகழாரம் சூட்டினர். புட்டினின் ஆட்சியில் ஏற்பட்ட மாற்றங்கள் பெரியளவில் நிகழ்ந்துள்ளது என்பதையும், அவர்களது கருத்தை நிராகரிக்க முடியாததென்பதையும் குறிப்பிட்டுக் கூறுதல் வேண்டும். இது ஜெல்சினால் ஏற்பட்ட அபிவிருத்தியாகக்கூட கருதலாம். ஆனால், புட்டின் தேர்தல் காலங்களில் நிகழ்த்திய பிரசாரங்களின் போதும், தனது கட்சியினதும், ஆட்சியினதும் கொள்கையாகப் புட்டின் முன்வைத்த அம்சமாக உள்ளது. ஐக்கியப்பட்ட ரஷ்யாவைக் கட்டிவளர்ப்பதாகும். (United Russia) ஐக்கிய ரஷ்யா என்பதில் - ரஷ்ய மக்களுக்கு அளவுக்கதிகமான மதிப்பும், கௌரவமும் இருப்பதாகக் கருதுகின்றனர். இது பற்றிய அடிப்படையைப் புரிந்துகொள்ளக் கடந்தகால ரஷ்யாவைச் சற்றுநோக்குவோம்.

இங்கு கடந்தகால ரஷ்யா எனக் குறிப்பிடுவது - சோவியத்யூனியனையும், சோவியத்யூனியன் உருவாக முன்பிருந்த ரஷ்யாவையுமேயாகும். அதாவது, ஜார் மன்னன் ஆட்சியைப் பிடிக்க முன்னிருந்த ரஷ்யாவையே உங்கள் முன் கொண்டுவரவிரும்புகிறேன். ரஷ்யாவுக்கு எழுச்சியும், வீழ்ச்சியும் இயற்கை மாற்றம் போன்றது. மகாபீட்டரின் ஆட்சியிலிருந்த ரஷ்யாவும், மகாபீட்டரின் ஆட்சியும் இன்றும் ரஷ்ய வரலாற்று ஆய்வாளர்களால் மறக்கமுடியாததொன்றாகவே உள்ளது. ஏன் ரஷ்ய மக்களே மகாபீட்டரை நினைவுகோரி நகரங்கள், கலைக்கூடங்கள், உயர்கல்வி நிறுவனங்களுக்கு அவரது பெயரை முன்மொழிந்து கௌரவப்படுத்துவதுடன், ஒவ்வொரு ஆட்சியாளனும் மக்களுக்காக உழைக்கவேண்டுமென விரும்புபவர்களாக உள்ளனர். அவரது திறமைகளையும், இராஜதந்திரத்தையும் புகழ்வதுடன், மக்களுக்காக ஆற்றிய சேவைகளையும் நினைவுகூருகின்றனர். அதன்பின்னர், ரஷ்ய மக்கள் - விளாடிமிர் லெனின் குறுகிய கால ஆட்சியைப்பற்றி நினைவு கொள்பவர்களாக உள்ளனர். அவரது காலத்தில் ரஷ்யர்கள் அடைந்த கௌரவத்தைத் தற்போதைய இளம்பிரிவினர் நினைவுகூருவதுடன், அதன் பின்னர் வந்த ஆட்சியாளர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டியும் இன்றுள்ள நிலையுடன் ஒப்பீடு செய்கின்றனர்.

பொருளாதார பலம், அரசியல் உறுதிப்பாடு, மனிதகௌரவம், பாதுகாப்பு, இராணுவ பலம் என்று ஐக்கியப்பட்ட ரஷ்ய மக்கள் அடைந்த பெருமையும், கௌரவமும், முதன்மையாகவே அவர்களால் கணிக்கப்படுகின்றது. நவீன மாற்றங்களையும், புதிய புதிய மொழிப் பிரயோகங்களையும் தகவல் புரட்சிக்குள் இணைந்திருக்கின்ற ரஷ்ய இளைய தலைமுறைகூட - தமது தாய், தந்தையர் மற்றும் தமது மூதாதையர் அனுபவித்த வாழ்க்கையைக்கூட, தாம் அனுபவிக்க முடியாதவர்களாக இருப்பதாக நினைக்கின்றனர். இதனைத் தாம் லெனினதும், கார்ல்மார்க்ஸினதும் சிலைகளை வீழ்த்தியபோது, நினைக்கவில்லை என ஒரு ரஷ்ய இளைஞன் கூறுகின்றான். எனவே, ரஷ்ய மக்களுக்கு ஐக்கியப்பட்ட ரஷ்யாவைப் பற்றிய உணர்வு மீண்டும் தூண்டப்பட்டுள்ளது. அது ரஷ்யாவிலுள்ள இடதுசாரி அரசியல் கட்சிகளைவிட, புட்டினின் அரசியலில் இருப்பதாக ரஷ்ய மக்கள் கருதுகின்றநிலை ஏற்பட்டுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில், புட்டினைப் பற்றிய மதிப்பீடு ஒன்று அவசியமாகவே அமைகின்றது. இதனை ஊடகங்களில் வெளிவந்த தகவலின் அடிப்படையிலும், ரஷ்ய அதிகாரிகள் சிலரது கருத்துக்களிலிருந்துமே மேற்கொள்ளமுடிகின்றது.

**விளாடிமிர் புட்டின் - முன்னாள் சோவியத் யூனியனின் உளவுத்துறை அதிகாரி - உள்நாட்டில் தேசிய உணர்வுமிக்கவராகவும், எல்லோராலும் மதிக்கப்படுபவராகவும் இருப்பதற்கு, அவரது அடக்கமான அனுகுமுறையே அடிப்படைக்காரணம் எனவும், அதிகம் பகட்டில்லாத யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் பக்குவமுடைய தந்திரசாலி எனவும், எதனையும் நிதானித்துப் பலதடவை யோசித்துவிட்டு, முடிவை எடுத்தபின்பு, அமுல்படுத்த தயங்காத பலசாலி என்றுகூறக்கூடியளவுக்கு நிதானமான அரசியல்வாதியாவார். ரஷயாவை அதிகம் நேசிக்கும் ரஷ்யக்காரனாக விளங்குபவர். இவரது உள்நாட்டுக்கொள்கை போன்றே வெளிநாட்டுக்கொள்கையும் ஆரம்பத்தில் அமைந்திருந்தது. குறிப்பாக, ஆப்கானிஸ்தான் போரில் ரஷ்யாவின் அணுகுமுறையை நன்கு திட்டமிட்டு, காத்திரமான முடிவுகளோடு செயற்பட்டவர்.**

விளாடிமிர் புட்டின் - முன்னாள் சோவியத் யூனியனின் உளவுத்துறை அதிகாரி - உள்நாட்டில் தேசிய உணர்வுமிக்கவராகவும், எல்லோராலும் மதிக்கப்படுபவராகவும் இருப்பதற்கு, அவரது அடக்கமான அணுகுமுறையே அடிப்படைக்காரணம் எனவும், அதிகம் பகட்டில்லாத யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் பக்குவமுடைய தந்திரசாலி எனவும், எதனையும் நிதானித்துப் பலதடவை யோசித்துவிட்டு, முடிவை எடுத்தபின்பு, அமுல்படுத்த தயங்காத பலசாலி என்றுகூறக்கூடியளவுக்கு நிதானமான அரசியல்வாதியாவார். ரஷ்யாவை அதிகம் நேசிக்கும் ரஷ்யக்காரனாக விளங்குபவர். இவரது உள்நாட்டுக்கொள்கை போன்றே வெளிநாட்டுக்கொள்கையும் ஆரம்பத்தில் அமைந்திருந்தது. குறிப்பாக, ஆப்கானிஸ்தான் போரில் ரஷ்யாவின் அணுகுமுறையை நன்கு திட்டமிட்டு, காத்திரமான முடிவுகளோடு செயற்பட்டவர்.

ரஷ்யாவின் பங்காளருக்குத் திட்டமிட்டு வழிநடத்தியவராக புட்டின் காணப்பட்டார். ஆனால், அவரது பிந்திய வெளிநாட்டுக் கொள்கையும், போக்கும் காரசாரமான விமர்சனத்துக்கு உள்ளாகிவிட்டது. குறிப்பாக, ஈராக் மீதான அண்மைக்கால யுத்தத்துக்குப் பின்பு, அவர் பின்பற்றும் அணுகுமுறை - தனித்து அவரது கௌரவத்தைப் பாதிப்பது மட்டுமன்றி, ரஷ்யர்களையும் பாதிப்பதாக உள்ளது. இதனால், புட்டினின் ஈராக் போருக்குப் பிந்திய வெளிநாட்டுக்கொள்கை - அமெரிக்காவுக்குச் சோடைபோவதும், பிராந்தியரீதியில் இயல்பான பாதுகாப்பை இழந்துபோவதும் - அவரது பலவீனத்தைக் காட்டுவதாக விமர்சிக்கப்படுகின்றது. இது ஏற்றுக்கொள்ளவேண்டியது என்பதனை நிராகரிக்கமுடியாது. புட்டினின் வருகை - அமெரிக்க அதிபர் புஷ்ஷின் வருகைக்குச் சவாலாக அமைந்திருந்ததை அக்கால அரசியல் சூழலை சரிவரக் கணக்கிட்டவர்கள் புரிந்திருப்பார்கள். ஆனால், புட்டினின் தற்போதையபோக்கு - அமெரிக்க அதிகார வர்க்கத்தை திருப்திப்படுத்துவதாகவும், அமெரிக்க நலன்களுக்கு விட்டுக்கொடுப்பதாகவும் உள்ளது. ஆனால், அத்தகையநிலை முற்று முழுதாக ரஷ்யாவை நிலைகுலையச்செய்யும் நிலையல்ல. மாறாக, சமகால அரசியல் போராட்டத்தில் புட்டினின் அணுகுமுறை யதார்த்தமானதொன்றாகவே அமைந்திருக்கின்றது எனவும், போதியபலம் தனித்த ரஷ்யாவுக்கு இல்லாதுள்ளது என்பதையும் ஏற்றுக்கொள்ளும் விமர்சகர்கள் உண்டு. ஏனெனில், புட்டினின் கட்சி அறுதிப் பெரும்பான்மை பெற்றதை - மேற்கு நாடுகள் விரும்பவில்லை என்பதனை அவர்களது தேர்தல் தொடர்பான அறிக்கையிலிருந்தே புரிந்துகொள்ளமுடியும்.

அமெரிக்க - ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்பாளர்கள் - ரஷ்ய நாடாளுமன்றத்துக்கான தேர்தலில், புட்டினின் ஆளும்கட்சிக்கு ஊடகங்கள், அதிகாரிகள் சார்பாக நடந்துகொண்டதாகவும், இந்தத் தேர்தலை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் தெரிவித்தனர். உண்மையிலேயே, இலங்கையில் வடக்கு - கிழக்குப் பகுதியில் வாழும் எம்மக்கள், வாக்கு போடாதநிலையிலேயே, நடந்த பல தேர்தல்களுக்கு அறிக்கை கொடுத்த கண்காணிப்புக் குழுவினர், இவ்வளவு காரசாரமான ஓர் அறிக்கையை வெளியே விடவுமில்லை. தேர்தல் எதனையும் நிராகரிக்கவுமில்லை. அப்படியிருக்கும்போது, ரஷ்ய தேர்தலை உடனடியாக நிராகரித்தமை - ஏதோவோர் அரசியல் உள்நோக்கத்துடனேயே நிகழ்ந்துள்ளதென்பது தெளிவாகிறது.

குறிப்பாக, தேர்தலை நிராகரிப்பதன் வாயிலாக, புட்டினை எச்சரிப்பது அல்லது அடுத்த காலப்பகுதிக்கான ஜனாதிபதியாக வரவிரும்பும் புட்டினை தடுத்துநிறுத்துவதாகவே அமையும். புட்டின் எந்தளவுக்கு ரஷ்யாவுக்காக உழைக்கிறார் என்பதனைவிட, மேற்குடன் எந்தளவுக்குச் சேர்ந்து செயற்படுகின்றார் என்பதையே மேற்கு எதிர்பார்க்கின்ற முக்கிய அம்சமாகும். அதற்கேற்ப ஆட்சியாளனை ரஷ்யாவில் அடுத்த ஜனாதிபதியாக அமர்த்துவதே மேற்கினுடைய அவாவாகவுள்ளது.

எனவே, புட்டின் மேற்குடன் ஒத்துழைப்பது போதாதநிலை என்பதைவிட, ரஷ்யாவின் வளர்ச்சியைப் பாதிக்கும் விதத்தில் செயற்பட முயல்வதே அவசியமான விடயமாகும். தற்போதைய பொருளாதாரப்போட்டியில் அதிக நிமிர்வை அடையமுடியாத ரஷ்யாவிற்கு- அரசியல், இராணுவரீதியில் மேற்குடன் போராடுவது கடினமானதாகவே அமையும். ஆனால், புட்டினின் பலமான எதிர்ப்பு சாத்தியப்படாத வரையும், மேற்கின் பலத்தை எந்த அரசாலும் தனித்தோ, கூட்டாகவோ தோற்கடிக்கமுடியாது. இத்தகைய தோற்கடிப்பு - சமநிலையான அதிகார மாற்றத்தை நிச்சயமாக ஏற்படுத்தும். ஆனால், புட்டின் சீனாவைப் போன்று உள்நாட்டுக்குள்ளேயே பெரும் அரசியல் எதிரிகளை உருவாக்கி வருகின்றார். சீனர்களுக்கு தைவான் எப்படியோ, அப்படியே ரஷ்யர்களுக்கும் செச்சினியா அமைந்துள்ளது. செச்சினியாவைக்கொண்டே ரஷ்யாவைத் தோற்கடிக்க, அமெரிக்க உட்பட்ட மேற்கு நாடுகள் முயன்றுவருகின்றன.

செச்சினிய போராட்டம் படிப்படியாக வளர்ச்சிநோக்கி நகருகின்றது. ஆரம்பத்தில் மிக தாழ்நிலையிலிருந்த ஆயுதப்போராட்டம், தற்போது வளர்ச்சியடைந்துவருகின்றது. தற்கொடை என்ற தீவிர தியாக உணர்வை வெளிப்படுத்தும் போராளிகளை - செச்சினியர்கள் உருவாக்க ஆரம்பித்துவிட்டனர். அதிலும் ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் தற்கொலைத் தாக்குதலில் ஈடுபடுகின்றநிலை - புட்டினின் அரசியல் எதிர்பார்க்கையைக் தகர்க்கக் கூடியதாகவே மாறலாம். புட்டின் - மேற்குடன் ஒத்துழைக்க மறுக்கும் சந்தர்ப்பங்களின் போதும், செச்சினியர் தாக்குவார்களேயாயின், ரஷ்யர்களின் ஐக்கியம் குலைவதுடன், அரசியல் மட்டுமல்ல பொருளாதார அடித்தளமே தகர்ந்துபோய்விடும். ஆனால், மேற்கில் தங்கியிருக்கும் செச்சினியர்களது போராட்டமும் நல்ல ஆரோக்கியமான விளைவை ஏற்படுத்தக்கூடியதல்ல. எப்போதும் மேற்குக்கு வலுவான ஒத்துழைப்பு தலைமை ரஷ்யாவில் கிடைத்துவிட்டால், செச்சினியர்களை இலகுவாக மேற்கு கழற்றிவிடும். அதற்கு அதிக காலம் எடுக்காது. எனவே, இரு பிரிவினரது இராணுவ, அரசியலும் ஆரோக்கியமற்ற தளத்திலேயே நகர்ந்துசெல்கிறது.

**ரஷ்ய மக்கள் - விளாடிமிர் லெனின் குறுகிய கால ஆட்சியைப்பற்றி நினைவு கொள்பவர்களாக உள்ளனர். அவரது காலத்தில் ரஷ்யர்கள் அடைந்த கௌரவத்தைத் தற்போதைய இளம்பிரிவினர் நினைவுகூருவதுடன், அதன் பின்னர் வந்த ஆட்சியாளர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டியும் இன்றுள்ள நிலையுடன் ஒப்பீடு செய்கின்றனர்.**

செச்சினியர்கள் பக்கம் புட்டின் கொண்டிருக்கும் அதிருப்தியான போக்கு - அவரது தேர்தல் வெற்றிக்கு இன்னோர் காரணியாகவுள்ளது. ஐக்கியமான ரஷ்யா என்பது- சோவியத் யூனியனின் மீளமைப்பாகக்கூட அமையலாமென, ஒரு ரஷ்ய அரசியல் விமர்சகர் கூறுகின்றார். எனவே, செச்சினியர் பக்கம் புட்டின் கொண்டிருக்கும் கொள்கை பலவீனமாக அமைந்திருந்தாலும், ரஷ்யர்கள் என்றநிலையில், புட்டினின் அரசியலை கலக்கும் ஒரு விடயமாகவுள்ளது. மாறாக செச்சினிய மக்களின் தேசிய தனித்துவம் பேணப்படுகின்றநிலையில், எழும் பிராந்திய அரசியலை ரஷ்யா தக்கவைக்கும் நிலையும் சமமான வலிமையைப் பெற்றதாக அமைந்துள்ளது.

செச்சினியா மட்டுமல்ல, ரஷ்யப் பிராந்தியம் முழுவதையுமே அமெரிக்கா ஆக்கிரமிக்க ஆரம்பித்துவிட்டது. அதிலிருந்து ரஷ்யாவைப் பாதுகாப்பதும், ரஷ்யாவின் ஐக்கியத்தை காப்பதிலுமே புட்டினின் அரசியல் வெற்றி தங்கியுள்ளது. தனித்து தேர்தலில் ரஷ்ய மக்கள் கொடுத்த தீர்ப்பாக மட்டுமல்லாது, எதிர்கால மாறுதலையும், ரஷ்யாவின் பாதுகாப்பையும் ரஷ்ய மக்கள் - புட்டினிடம் கையளித்துள்ளனர். எனவே, ரஷ்யாவின் ஐக்கியம், பிராந்தியத்தின் பாதுகாப்பு, முழு உலகத்துக்குமான மாறுதல் என்ற பாரிய தளத்தை இலக்காகக்கொண்டே, ரஷ்ய மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

இதனைப் புட்டின் சாத்தியப்படுத்துவாரா? அல்லது அவரது கட்சி முன்னெடுக்குமா? அதற்கு மேற்குலகம் இடும் தடைகளை இலகுவாகத் தாண்டமுடியுமா? என்ற பல கேள்விகள் எழுந்துள்ளன. மேற்கின் அரசியல், பொருளாதார, இராணுவ அணுகுமுறைகளை வெளியே நின்று எதிர்த்த சோவியத்யூனியன்- முடியாதநிலையில், அதே மேற்கில் அரசியல், பொருளாதார, இராணுவ அணுகுமுறைக்குள் புகுந்து, அதனை தோற்கடிக்க முயலும் ரஷ்யா - தோற்கடிக்குமா? அல்லது மூழ்கிப் போகுமா?


# கைதான சதாம்...



ஆட்சியின்போது



தலைமறைவின்போது




கைதுசெய்யப்பட்ட போது



மரபணுச் சோதனையின்போது

## சதாம் கைதான பின்னர் நடந்த தற்கொலைத் தாக்குதலில் 17 பேர் பலி; 30 பேர் காயம்!



ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசேன் கைதுசெய்யப்பட்ட பின்னர் பாக்தாத்தின் தென்பகுதியிலுள்ள கலிடியா நகரில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தின் முன்பாக நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 17 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டதாகவும், 30 இற்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் பிரான்ஸ் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

காரில் வந்த தற்கொலைதாரியே குண்டை வெடிக்கவைத்து இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடைபெற்ற இடத்தில் 13 அடி வரையான பள்ளம் ஏற்பட்டுள்ளதாகவும், பொலிஸ் நிலையத்தின் முன்பக்கச் சுவர் முற்றாக நிலத்தில் இடிந்து வீழ்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் அதிக எண்ணிக்கையானோர் கொல்லப்பட்ட தாக்குதல் இது எனவும் அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

## 2 ஆவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் இந்திய அணி 7 விக்கெட் இழப்புகளுக்கு 447

### ராகுல் ராவிட் ஆட்டமிழக்காமல் 199

அவுஸ்ரேலியாவிற்கு எதிராக அடிலெய்டில் நடைபெறும் இரண்டாவது கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்ட முடிவான நேற்று இந்திய அணி ஏழு விக்கெட்டுக்களை இழந்து 477 ஓட்டங்களை எடுத்து தனது இக்கட்டான நிலையிலிருந்து மீண்டுள்ளது.

இரண்டாம் நாள் ஆட்டமுடிவின்போது 180 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுக்களை இழந்து நெருக்கடிநிலையிலிருந்த இந்திய அணியை, ராகுல்ராவிட்டும், வி.வி.எஸ்.லக்ஸ்மனும் சோடிசேர்ந்து மிகச்சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி இக்கட்டான நிலையிலிருந்து மீட்டனர்.

இரண்டாம் நாள் ஆட்டமுடிவின்போது ராவிட் 43 ஓட்டங்களுடனும், லக்ஸ்மன் 55 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். தொடர்ந்து நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தில் லக்ஸ்மன் 148 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் அன்ரூ பிச்சலின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். லக்ஸ்மனும், ராவிட்டும் ஐந்தாவது விக்கெட் இணைப்பாட்டமாக 303 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அதன்பின்னர் விக்கெட் கீப்பர் பார்தீவ் பட்டேல் 37 ஓட்டங்களுடனும், அகர்கர் 11 ஓட்ங்களுடனும் ஆட்டமிழந்தனர். தற்போது ராகுல் ராவிட் 199 ஓட்டங்களுடனும், அனில் கும்ளே ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

முன்தாக அவுஸ்ரேலிய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 556 ஓட்டங்களை எடுத்தது. இதில் றிக்கி பொண்டிங் 242 ஓட்டங்களை எடுத்தமை குறிப்பிடத்தக்கது.

ராஜா யாழ்ப்பாணம்.
தருண், த்ரிஷா, விவேக், மணிவண்ணன் நடித்த
எனக்கு 20 உனக்கு 18
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1847)

நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல்
விஜயகாந், கிரண் நடித்த
தென்னவன்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
JACKIECHAN நடித்த
"WHO AM I" (கராட்டிப் படம்) (சி-1846)

## மக்களின் வீட்டுப் பயன்பாட்டிற்கான தீர்வை விலக்களிக்கப்பட்ட பொருட்கள்

பின்வரும் பொருட்கள் தீர்வை விலக்கு அளவுக்கு அல்லது அதன் பெறுமதிக்கமைவாக ஏதாவது நான்கு வகைப் பொருட்களை - பயணி ஒருவர் தமது வீட்டுப் பயன்பாட்டிற்கெனக் கொண்டுவரும்போது அப்பொருள்களுக்குத் தீர்வை விலக்களிக்கப்படும் என, தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

### பொருட்களின் விபரம் வருமாறு:

வானொலிப்பெட்டி அல்லது ஒலிப்பதிவுப் பெட்டி (01 - ரூபா 6500 இற்குட்பட்டது), ஈருருளி (01 - பொருத்தப்பட்ட தேவையான இணைப்புக்களுடன் அல்லது ரூபா 2000 இற்குட்பட்ட ஈருருளி உதிரிகள்), புகைப்படக்கருவி (01 - ரூபா 35000 இற்குட்பட்டது), மின்சூழுக்கான மின்கலங்கள் (06), உடையழுத்தி (01), கதிரைகள் ஆறும், மேசை ஒன்றும் கொண்ட தொகுதி (ரூபா 2750 இற்குட்பட்டது), மெத்தை (01)

காற்றுக்கணையா விளக்கு (அரிக்கன் லாம்பு, 01), பெற்றோமாக்ஸ் (01), மண்ணெய் அடுப்பு அல்லது மின்னடுப்பு அல்லது எரிவாயு அடுப்பு (01), நீர் சூடாக்கி (WATER HEATER - 01), கலக்கி (MIXTURE - 01), கப்பி (01), கத்தி (02 - ஒன்று ரூபா 300 இற்கு உட்பட்டது), மண்வெட்டி (01), கோடரி (01), பிக்கான் (01), அரிதட்டு (01), சுளகு (01), விளக்குமாறு (01), துடைப்பம் (02),

பிட்டுப் பானையும் - பிட்டுக்குழலும் (01 தொகுதி), தாச்சி (01 - ரூபா 400 இற்கு உட்பட்டது), இட்டலிச் சட்டி (01 - ரூபா 500 இற்கு உட்பட்டது), உரலும் - உலக்கையும் (01), அம்மியும் - குழவியும் (01 - ரூபா 1500 இற்கு உட்பட்டது), ஆட்டுக்கல் ( 01 - 1500 இற்கு உட்பட்டது), தோசைக்கல் (01), கேத்தில் (01), துருவுபலகை (01), அரிக்கன்சட்டி (01), சாப்பாட்டுத்தட்டு (வெள்ளி, நெகிழம் - 1/2 டசின்),

தண்ணீர்க் குவளை (வெள்ளி, நெகிழம் 1/2 டசின்), பெரிய தண்ணீர்க்குவளை (02), கண்ணாடிக்குவளை (கிளாஸ்- 1/2 டசின்), வெள்ளிக் கிண்ணம் (03 - ஒன்று ரூபா 100 இற்கு உட்பட்டது), கரண்டி (04), சட்டி (02), சட்டமூடி (02), வாளி (இரும்பு, நெகிழம் - 01 - ரூபா 350 இற்கு உட்பட்டது), சிறிய பானை (அலுமி னியம் - 02 - ஒன்று ரூபா 350 இற்கு உட்பட்டது), பெரிய பானை (அலுமினியம் - 01 - ஒன்று ரூபா 500 இற்கு உட்பட்டது), பெரிய பானை (மண் - 02),

கத்தரிக்கோல் (01), சுடுநீர்ப்போத்தல் (01), சுவர்மணிக்கூடு (01 - ரூபா 1000 இற்கு உட்பட்டது), மேசை மணிக்கூடு (01 - 500 இற்கு உட்பட்டது), கால்மிதி (02), நுளம்புவலை (01), தெய்வப்படம் (03 - ஒன்று ரூபா 300 இற்கு உட்பட்டது), நெகிழப்பாய் (பிளாஸ்ரிக் பாய் - 03), கைப்பை (தோல் அல்லது நெகிழம் - 02 - ரூபா 300 இற்கு உட்பட்டவை), கயிற்றுவளையம் (நைலோன் - 01 - ரூபா 500 இற்குட்பட்டது),

குடை (02), முகம்பார்க்கும் கண்ணாடி சிறிது (02 - ஒன்று ரூபா 400 இற்கு உட்பட்டது), வழலை (குளியல், சலவை - 1/2 டசின்), சம்பூப்பை (01 டசின்), மழைக்கவசம் (01 டசின்), ஜக்கற் (01 - ரூபா 400 இற்கு உட்பட்டது), காலணி (சான்ரில்ஸ் - 01 சோடி - ரூபா 500 இற்கு உட்பட்டது), காலணி (செருப்பு - 02 சோடி - ரூபா 100 இற்கு உட்பட்டது), காலணி (சப்பாத்து - 01 சோடி ரூபா 1000 இற்கு உட்பட்டது),

தேங்காய் நெய் (05 லீற்றர்), மண்ணெய் (05 லீற்றர்), கிருமிநாசினி (போத்தல் அல்லது கான் - ரூபா 1000 இற்கு உட்பட்டது), ஒரு குடும்பத்துக்கென எடுத்துவரப்படும் பலசரக்குப் பொருட்கள் (ரூபா 2000 இற்கு உட்பட்டவை), ஒரு குடும்பத்திற்கென எடுத்துவரப்படும் உணவுப் பொருட்கள் (சிற்றுண்டிகள் - ரூபா 1000 இற்கு உட்பட்டது), ஒரு குடும்பத்திற்குத் தேவையான புடவைவகை (ரூபா 4000 இற்குட்பட்டது),

குழந்தைகளுக்கான வூல்த் தொப்பி (03), குழந்தைகளுக்கான ஊஞ்சல் (01), குழந்தைகளுக்கான கதிரை (01), குழந்தைகளுக்கான தள்ளுவண்டி (01), குழந்தைகளுக்கான உடை (01), குழந்தைகளுக்கான ஊட்டி (பீடிங்கப் - 02), குழந்தைப் பேணுகைத் தொகுதி (BABY SET - 01 தொகுதி), குழந்தைகளுக்கான உடைதாங்கி (கங்கர் - 01), குழந்தைகளுக்கான றபர் சீற் (02), குழந்தைகளுக்கான மிதிவண்டி (01), குழந்தைகளுக்கான கொமட் (01).

### திருமண வீட்டிற்கான பொருட்கள்

பட்டுச்சேலை (01 - ரூபா 13,000 இற்கு உட்பட்டது), பட்டுச்சேலை (01 - ரூபா 4000 இற்கு உட்பட்டது), பட்டுவேட்டி (02 - ஒன்று ரூபா 3000 இற்கு உட்பட்டது), காற்சட்டைத் துணி (03 - ஒன்று ரூபா 500 இற்கு உட்பட்டது), சேட் (03- ஒன்று ரூபா 750 இற்கு உட்பட்டது), சாரம் (03 - ஒன்று ரூபா 300 இற்கு உட்பட்டது), ரீசேட் (02 - ஒன்று ரூபா 500 இற்கு உட்பட்டது), பஞ்சாபி (02 - ஒன்று ரூபா 1000 இற்கு உட்பட்டது), பாவாடை (02 - ஒன்று ரூபா 300 இற்கு உட்பட்டது), சட்டை (02 - ஒன்று ரூபா 300 இற்கு உட்பட்டது), உடைப்பெட்டி (01 - ஒன்று ரூபா 1000 இற்கு உட்பட்டது), அழகூட்டும் - மெருகூட்டும் பொருட்கள் (ரூபா 1000 இற்கு உட்பட்டவை).

### இறுதிச் சடங்கிற்கென எடுத்துவரப்படும் பொருட்கள்

வெற்றிலை (500), பீடி (02 பண்டில்), சுருட்டு (500), வெடிப்பெட்டி (02), மெழுகுதிரி (ரூபா 200 இற்கு உட்பட்டது), கற்பூரம் (ரூபா 200 இற்கு உட்பட்டது), சாம்பிராணி (ரூபா 100 இற்கு உட்பட்டது), உடை (ரூபா 1300 இற்கு உட்பட்டது), காலுறை (ரூபா 150 இற்கு உட்பட்டது)

ஆகிய பொருட்களை - மக்கள் பயணத்தின்போது தமது வீட்டுப் பயன்பாட்டிற்கெனக் கொண்டுவரும் போது தீர்வை விலக்களிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தென்பகுதியிலிருந்து இடமாற்றம் பெற்றுவரும் அரச திணைக்கள, அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் தாம் பயன்படுத்திய பொருட்களைக் கொண்டுவரும்போது அவற்றிற்குத் தீர்வை விலக்களிக்கப்படும்.

தமிழீழத்தில் நிலையாக வதியும் நோக்குடன் தென்பகுதியிலிருந்தோ அல்லது வேறு நாடுகளிலிருந்தோ வருவோர் தாம் பயன்படுத்திய பொருட்களைக் கொண்டுவரும்போது அப்பொருட்களுக்கு தீர்வை விலக்களிக்கப்படும்.

கல்வி நோக்கத்திற்காக கொண்டுவரப்படும் கணினிகளுக்கும், துணைப்பொருட்களுக்கும் தீர்வை விலக்களிக்கப்படும்.

தீர்வை விலக்குப் பெறுவதற்குரிய பொருட்களைக் கொண்டுவரும்போது - பொருட்களைக் கொண்டுவருபவரின் பெயர், அடையாள அட்டை எண் என்பன குறிப்பிடப்பட்டுள்ள முறையான சிட்டைகளைக் (கடையின் பெயர், சிட்டைத் தொடரெண் என்பன தெளிவாக இருத்தல்வேண்டும்) கொண்டுவருதல் வேண்டும்.

பயணிகளுக்கு வழங்கப்படும் தீர்வைச் சலுகைகளை வாணிப நோக்கத்திற்காகப் பயன்படுத்துதல்கூடாது.

### அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் கொண்டுவரும் பொருட்கள்

அரச திணைக்களங்கள் முன்னொப்புதலுடன் திணைக்களப் பயன்பாட்டிற்கென கொண்டுவரும் பொருட்களுக்கு தீர்வை விலக்களிக்கப்படும்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்னொப்புதலுடன் மக்கள் நலப் பயன்பாட்டிற்கும், நிறுவனப் பயன்பாட்டிற்கும் கொண்டுவரும் பொருட்களுக்கு தீர்வை விலக்களிக்கப்படும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஊறணி படைமுகாம் காணியை விலைக்கு வாங்க நடவடிக்கை!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஊறணி விசேட அதிரடிப்படை முகாம அமைந்துள்ள காணியை விலைக்கு வாங்குவதற்கு அதிரடிப் படையினர் முயன்றுவருவதாகத் தெரியவருகிறது.

நேற்றுமுன்தினம் காலை 7 மணியளவில் முகாம் அமைந்துள்ள இடத்தில் உள்ள வீடுகள், காணிகளுக்குச் சொந்தமான 18 குடும்பங்களைச் சேர்ந்த அங்கத்தவர்களை அழைத்த விசேட அதிரடிப்படையினர், அவர்களிடம் காணிகளுக்கான பெறுமதியைத் தருவதாகத் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு காணிகளையும், வீடுகளையும் தமக்கு விற்பனை செய்வதால், அதிக நன்மைகிட்டும் என வற்புறுத்தித் தெரிவித்ததுடன் காணிகளுக்கு 5 லட்சம் முதல் 10 லட்சம் ரூபாவரை வழங்குவதாகவும் இராணுவத்தினர் கூறியுள்ளனர்.

இது தொடர்பாக அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேருவிற்கு அப்பகுதி மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர். கடந்த ஜனவரி மாதமும் இத்தகைய முயற்சியொன்றை அதிரடிப்படையினர் மேற்கொண்டிருந்தனர்.

எனினும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு முறைப்பாடு செய்ததையடுத்து அந்த முயற்சிகள் கைவிடப்பட்டிருந்தன.

தற்போது ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றுள்ள நிலையில் மீண்டும் இது தொடர்பான தலையிடி மக்களுக்கு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாற்சந்தி

"கொஞ்சக் காலமாக சந்திரிகா அம்மையார் சமாதானகாலத்தில் விடுதலைப்புலிகள் தம்மைப் பலப்படுத்திக் கொண்டுள்ளனர்... கப்பல்கப்பலா ஆயுதங்களை இறக்கியிருக்கினம்... பதினாறாயிரமாக போராளிகளை அதிகரித்துவிட்டினம் என்று பக்கத்தில் இருந்து கணக்கில் இட்ட மாதிரி அறிக்கைவிட்டுக்கொண்டிருந்தவர் எல்லே...!"

"ஓமோம் இப்ப அதுக்கென்ன...?"

"இப்பதானே விசயம் விளங்குது... ஏன்இப்படிச் சொன்னவா என்று"

"ஏன் சொன்னவ...?"

"நேற்றைய பேப்பரை பார்க்கேல்லையோ... முப்படை அதிகாரிகள் சீனாவுக்கெல்லே ஆயுதங்களையும், போர்ப்படகுகள் மற்றும் விமானங்களையும் கொள்வனவுசெய்யப் போகினம் எல்லே..."

"ஓ... அதைச் சொல்லுறியே ...! அவ முன்கூட்டியே இப்படிச் சொல்லேக்கை எனக்கு விளங்கிட்டுது... மனிசி இன்னும் சமாதானத்திற்காக யுத்தம் செய்கின்ற இலட்சியத்தில இருந்து மாறேல்லை என்று..."

"ஆயுதக் கொள்வனவினை கோடிக்கணக்கில ஊழல்செய்து தங்கட கோடிக்குள்ள கோடிகோடியாகச் சேர்த்தவைக்கு சமாதானம் பிடிக்குமோ... சமாதானத்திற்குக் கூட சண்டைபிடிக்கத்தான் பிடிக்கும்..."

"சீனாவும் சமாதானத்தை விரும்புவதாக ஒரு அறிக்கைவிட்டிருப்பதாக ஞாபகம்..."

"நீயொன்று... ஆயுத விற்பனைக்கும், சமாதான முயற்சிக்கும் முடிச்சுப்போடப்பார்க்கிறாய்...!"

"அப்ப சமாதானத்தை பேசிக்கொண்டு சண்டையைப் பிடி என்பது தான் அவையளின்ர தத்துவம் போலை..."

"நல்லாய் சொன்னாய் மணியம்... இண்டைக்கு உலகத்தில புதுசு புதுசாய் ஆயுதங்களை விற்பனை செய்து விற்கிற நாடுகள்தான் சமாதானம் பற்றியும் உரக்கக் கத்தினம்..."

"இது கத்தியையும் வித்து கேடயத்தையும் விற்கின்ற கதைதான் கனகு..."

-தெருவாசி

# ஜனாதிபதி வசமுள்ள அமைச்சுக்களுக்கான ஒதுக்கீட்டு விவாதங்களில் பிரதமர் ரணில்!

பாதுகாப்பு, உட்துறை மற்றும் ஊடகத்துறை அமைச்சுக்களுக்கான குழுநிலை விவாதம் அடுத்தவாரம் நாடாளுமன்றில் நடைபெறவுள்ள போது அதற்கான பிரதிநிதித்துவத்தைப் பிரதமர் ரணில் வகிப்பாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் ரணிலின் செயலக அதிகாரிகள் இது தொடர்பாகத் தெரிவிகையில், வரவு - செலவுத் திட்டத்தை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமே நாடாளுமன்றில் சமர்ப்பித்தது. எனவே, அதனை நடைமுறைப் படுத்த வேண்டிய கடமையும் அதற்கே உண்டு.

கடந்த மாதம் ஜனாதிபதியால் பொறுப்பேற்கப்பட்ட மூன்று அமைச்சுக்கள் சார்பில் அவர் நாடாளுமன்றம் வருவதில்லை. இந்த அமைச்சுக்கள் தொடர்பில் அவருக்குத் துணையாக ஆட்களும் இல்லை. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக இந்தவாரம் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையிலான சந்திப்பில் பேசுவதற்குச் சென்றபோதே மேற்படி சிக்கல் எழுந்தது.

அடுத்த வாரம் நடைபெறவுள்ள மூன்று அமைச்சு மீதான விவாதத்தில் எதிர்க்கட்சிகள் கேள்விகள் எதனையும் எழுப்பவில்லையெனில் இந்த அமைச்சுக்கள் மீது எந்தவித விவாதத்திற்கும் இடமில்லாது போகும்.

இந்த அமைச்சுக்கள் மீதான விவாதத்தை ஜனாதிபதியே ஆரம்பித்து வைக்கவேண்டும். ஆனால், இதுவரை இது தொடர்பில் எதுவித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. ஆனால், சில தினங்களில் இது தொடர்பாக யார் விவாதத்தை ஆரம்பித்து வைப்பதென முடிவு எடுக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதேவேளை இந்த அமைச்சுக்கள் மீதான விவாதம் எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ளது எனவும், இதில் முதலில் பாதுகாப்பு, இரண்டாவதாக ஊடகத்துறை பின்னர் உட்துறை அமைச்சுக்களுக்கான விவாதங்கள் நடைபெற ஏற்பாடாகியுள்ளதென பிரதமர் அலுவலகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# படையினர்-விடுதலைப் புலிகள் இன்று அம்பாறையில் சந்திப்பு!

(அம்பாறை)

தமிழீழ விடுலைப் புலிகளுக்கும், படை அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று இன்று அம்பாறை மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது.

அக்கரைப்பற்றில் அமைந்துள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் இன்று காலை இடம்பெறவுள்ள இந்தச் சந்திப்பில், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தலைமையிலான குழுவினர் தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில் பங்குபற்றவுள்ளனர்.

படையினர் சார்பில் - அம்பாறை மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி உப்பலி செனவிரட்ண தலைமையிலான குழுவினர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் ஆலையடிவேம்பு, காஞ்சிரங்குடா முதலான பகுதிகளில் இராணுவ முகாம்கள் புதிதாக அமைக்கப்படுவது குறித்து ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

## நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு...

இங்குள்ள படையினரின் செயற்பாடுகள் குறித்தும் பொலிஸ் நிர்வாகம் குறித்தும் அமெரிக்க அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்தி விசாரித்து அறிந்துகொண்டதாகத் தெரியவருகிறது. இந்தச் சந்திப்பின்போது இங்குள்ள நிலைவரங்கள் குறித்து அரச அதிகாரிகள் விரிவாக எடுத்துக்கூறியதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -யாழ்.செயலகத்தில் நடந்த கலந்துரையாடலுக்கு பத்திரிகையாளர்களை அதிகாரிகள் அனுமதித்தபோதும் - அமெரிக்க அதிகாரிகள் அவர்களை வெளியேறுமாறு பணித்தனர்.

அமெரிக்க அதிகாரிகள் பத்திரிகையாளர்களை வெளியேற்றியமை குறித்து யாழ்.செயலக அதிகாரிகள் ஏமாற்றமடைந்தனர்.

மிகவும் இரகசியமாக நடந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து வெளியில் எவருக்கும் தகவல் தெரிவிக்கவேண்டாமென அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகள், செயலக அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டதாகத் தெரியவருகிறது.

## சில பொருட்கள்...

விதிக்கப்பட்டுள்ள தீர்வைகளும் நீக்கப்பட்டுள்ளன. அத்துடன் மக்கள் அறிவியல் ரீதியாக வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக சிறுகதைகள், நாவல்கள் மற்றும் ஆலய வழிபாட்டுத் தேவைககான மெழுகுவர்த்தி, கற்பூரம் போன்றவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள தீர்வைகளும் நீக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் உற்பத்தியைப் பாதிக்காத வகையில் தென்னிலங்கையிலிருந்து எடுத்துவரப்படும் முட்டை, இறைச்சிக்கோழி, உராய்வுநீக்கி, அரிசி ஆகியவற்றின் தீர்வைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தீர்வை நீக்கப்பட்ட பொருட்கள் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வருவதுடன் அதிகரிக்கப்பட்ட பொருட்களுக்கான தீர்வை இன்றுமுதல் நடைமுறைக்கு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(இது தொடர்பான முழுமையான விவரம் இரண்டாம் பக்கத்தில்)

## குடாநாட்டில் டெங்கு அபாயம்...

இந்த நோய்க்கு உட்பட்டுள்ளதாகவும் யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மாதத் தொடக்கத்தில் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் வந்து காய்சலுக்காக சிகிச்சை பெறறோரில் 15 பேர்வரையில் டெங்கு காய்ச்சலின் தாக்கத்திற்கு உட்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

எனினும் உறுதிப்படுத்தப்பட்ட வகையில் டெங்கு காய்ச்சலுக்குரிய அறிகுறிகளுடன் மேலும் 15 பேர் வரையில் சிகிச்சைபெற்றுச் சென்றிருந்தனர்.

இவ்வாறு டெங்குக் காய்ச்சலில் பாதிப்புக்குள்ளாவோரின் எண்ணிக்கை கடந்த வாரம் முதல் அதிகரித்துக்காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வாரகாலத்தில் 20 பேர்வரையில் டெங்கு காய்ச்சலுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களில் 10 பேர் வரையில் இன்னமும் நோய் குணமடையாத நிலையில் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை உடுவிலைச் சேர்ந்த கு.ரதி (வயது-47) என்னும் குடும்பப் பெண் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு தற்போது அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

டெங்கு காய்ச்சலைப் பரப்பக் கூடிய நுளமபுகளைப் பரவாது தடுப்பதன் மூலமே பொதுமக்கள் தம்மை இந்தக் காய்ச்சலில் இருந்து பாதுகாக்கக் கூடியதாக அமையும் என்பதால் மக்கள் இதுகுறித்து விழிப்புடன் நடந்து கொள்ளவேண்டும் என யாழ்.போதனாவைத்தியசாலை வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (ப)

## 10 கோடி ரூபா இழப்பு ஏற்படும்...

நீக்கப்பட்டுள்ளது.

மக்களில் பல்லாயிரக்கணக்கானோர் கடற்றொழில், வேளாண்மை ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளனர். பொருளாதாரத்தில் இவர்கள் தன்னிறைவு அடைவதற்கான இவற்றின் உள்ளீடுகளுக்கான தீவை நீக்கப்பட்டுள்ளது.

விவசாய உள்ளீடுகளுக்கான தீர்வைகள் நீக்கப்பட்டதன் மூலம் அந்தப் பொருட்களின் உற்பத்திச் செலவு குறையும். இதன்மூலம் அவர்களின் வாழ்க்கைச் செலவு குறையும்.

அத்துடன் - மரங்கள், கால்நடை உணவுகள், வழிபாட்டுப் பொருட்கள் சிலவற்றுக்கான தீர்வைகள் நீக்கப்பட்டுள்ளது.

மக்களை அறிவியல் ரீதியாக மேம்படுத்துவதற்கான பொருட்களின் தீர்வைகளும் குறைக்கப்பட்டுள்ளன.

சுயமாகத் தொழிலில் ஈடுபடக் கூடிய வகையில் குடாநாட்டில் உற்பத்திசெய்யப்படும் உற்பத்திப் பொருட்களின் தீர்வைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனால் தென்னிலங்கையிலிருந்து வரும் பொருட்களின் விலை அதிகரிக்கும் போது குடாநாட்டின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யமுடியும். மக்கள் எமக்குத் தந்த படை வலிமையால் சர்வதேச சமூகம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்வந்துள்ளது. இதற்குக் காரணம் எமது மக்கள் என்பதையும் நாம் உணர்ந்துள்ளோம்.

பொதுமக்கள் மீதுள்ள சுமைகள் படிப்படியாகக் குறைக்கப்பட வேண்டுமென நாம் விரும்புகிறோம். எனினும் எமது இயக்கத்தைப் பேணுவதற்கான தேவை எமக்குள்ளது.

இந்நிலையில், இயக்கத்தினதும் மக்களினதும் தேவையை நிறைவேற்றுவதற்கு மக்களுடைய நிதிப் பங்களிப்பை ஏற்படுத்தியுள்ளோம். மக்கள் மீதுள்ள இந்தச் சுமைபடிப் படியாக நீங்கும்.

தென்னிலங்கையிலிருந்து வரும் பொருட்களால் உள்ளூர் உற்பத்தி பாதிக்கப்படும் என்று கருதினால், அந்த உற்பத்தியாளர் மக்களின் தேவையை நிறைவேற்றக்கூடிய வகையில் பொருட்கள் தன்னிடம் இருப்பதை உறுதிப்படுத்தினால், அதன்வரியை அதிகரிதது விற்பனையைக் குறைக்கவோ அல்லது அந்தப் பொருட்களின் வரவைத் தடுக்க முடியுமெனவும் தெரிவித்தார்.

## ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன்...

மணியளவில் இவர்களைக் கைது செய்த அமெரிக்கப் படையினருக்கு, தாடியுடன் காணப்பட்டவர் சதாம் ஹுசைனா என்ற சந்தேகம் எழுந்தது. இதையடுத்து அமெரிக்க இராணுவ மருத்துவர்களின் பரிசோதனைக்காக குறித்த நபர் அனுப்பப்பட்டார்.

ஆனால், இந்தத் தகவல் மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டது. நேற்று மாலை அமெரிக்க அதிகாரிகள் திக்ரிற் நகரில் சுரங்க அறையில் வைத்துக் கைதானவர் சதாம் ஹுசைனாக இருக்கலாம் என ஊடகங்களுக்குத் தகவல் வெளியிட்டனர். ஆனால், உடனடியாக அந்தத் தகவல் உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்த நிலையில் நேற்று மாலை ஈராக் தலைநகர் பாக்தாத்தில் ஈராக்கிற்கான அமெரிக்காவின் பிரதம நிர்வாகி போல் பிறீமர் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

திக்ரிற் நகரில் வைத்து கைது செய்யப்பட்டவர் சதாம் ஹுசைன் தான் என்பதை இந்தச் செய்தியாளர் மாநாட்டில் போல் பிறீமர் உறுதிப்படுத்தினார்.

கைதானவர் சதாம் ஹுசைன் தான் என மருத்துவர்கள் மரபணுச் சோதனை மூலம் உறுதிசெய்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

சதாம் ஹுசைன் அமெரிக்கப் படைகளால் எந்த எதிர்ப்புமின்றிக் கைதுசெய்யப்பட்டதாகவும் இவர் அமெரிக்கத் தளம் ஒன்றில் காவலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சதாம் ஹுசைன் கைதுசெய்யப்பட்டுள்ளதை உறுதிசெய்த பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர், போர்க்குற்றங்களுக்காக ஈராக் நீதிமன்றிலேயே அவர் விசாரிக்கப்படுவார் எனவும் தெரிவித்தார்.

## இந்திய மீனவரின் அத்துமீறலை...

தியில் அத்துமீறி மீன்படித்துச் செல்வதனால் பல மில்லியன ரூபாய்களை இலங்கை இழந்துள்ளது. அத்துடன் இந்த நடவடிக்கையை நாம் நிறுத்தாவிட்டால் தொடர்ந்தும் நாம் பல மில்லியன் ரூபாய்களை இழப்பது தவிர்க்க முடியாததாகி விடுமென மீன்வள அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமைச்சர் ஹெட்டியாராச்சி மேலும் தெரிவிக்கையில் இருநாடுகளும் பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் செயற்படவுள்ளன. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மாற்று வழிகள் தொடர்பாக இருதரப்பினரும், கொழும்பிலும், டெல்கியிலும் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர். இதன்மூலம் பிரச்சினைக்கான தீர்வு எட்டப்பட்டுள்ளது. இருபகுதியினரும் இது தொடர்பாக ஒன்றாகச் செயற்படவுள்ளோம்.

வடக்கு, கிழக்கு கடற்பகுதிகளில் இறால், நண்டு, மற்றும் பிற மீனினங்கள் ஏற்றுமதிக்கானவையாக பெரும்ளவு உள்ளன. ஆனால் போர் தொடங்கிய காலத்திலிருந்து அந்தப் பகுதிகளில் மீன்பிடித் தொழிற்துறையை விருத்தி செய்ய முடியாமல் இருந்தது. இதனால் பாக்குநீரிணையூடாக அத்துமீறிவந்த இந்திய மீனவர்கள் இந்தக் கடற்பகுதிகளிலிருந்த மீன் வளங்களைப் பிடித்துச் சென்றனர்.

இவ்வாறு அத்துமீறிவந்த பெருமளவு இந்திய மீனவர்களில் சிறுபகுதினரையே கடற்படை, விடுதலைப் புலிகள் மற்றும் உள்ளூர் மக்கள் பிடித்துள்ளனர். வடக்கு - கிழக்கில் வாழும் மீனவர்களின் அடிப்படை வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு திட்டங்களை கொண்டுவரும் நிலையில், இந்திய மீனவர்களின் நடவடிக்கை கவலையளிப்பதாக உள்ளது.

இதேவேளை, இவ்வாறான அத்துமீறல் சம்பவங்களுக்கு 1.5 மில்லியனில் இருந்து 5 மில்லியன் வரை தண்டம் அறவிடப்படுகின்றது. அத்துடன் அத்துமீறும் மீனவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர்களும் சிறையில் அடைக்கப்படுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.